Registered as a Newspaper
பக்கங்கள் 16
விலை ரூ. 50



"இதோட இவை விடப்போறேல்ல.. திரும்பக் கைது, திரும்ப வழக்கு இப்பிடியே எங்கட காலம் போகுது பாருங்கோ"

# உதயன்

சுடர் : 39
கதிர் : 115
புதன்கிழமை
20 மார்ச் 2024
பங்குனி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

## வெடுக்குநாறிமலை வழக்கு

# தள்ளுபடி!

## கைதான எண்மரும்

# விடுதலை!

வவுனியா, மார்ச் 20

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று பொலிஸாரால் மிருகத்தனமான முறையில் கைது செய்யப்பட்ட எண்மரையும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை விடுவித்ததுடன், அவர்கள் மீதான வழக்கையும் தள்ளுபடி செய்தது வவுனியா நீதிவான் நீதிமன்றம்.

15



## ஆனந்தக்கண்ணீர்

வவுனியா, மார்ச் 20

வெடுக்குநாறிமலையில் கைதுசெய்யப்பட்டவர்கள் விடுதலைசெய்யப்பட்டு நீதிமன்றால் வெளியேவந்த நிலையில் அவர்களை ஆரத்தழுவிய உறவினர்கள் ஆனந்தக்கண்ணீர் வடித்தனர்.

15

## வாக்குகளுக்காகவே எம்.பி.க்கள் நாடகமாம்

கொழும்பு, மார்ச் 20

இந்த நாட்டில் உள்ள பௌத்தர்கள் இந்துக் கோயிலுக்கு முன்னால் சென்று பௌத்த வழிபாட்டில் ஈடுபடுகின்றனரா? அவ்வாறு நடப்பதில்லை. இனவாத அரசியல்வாதிகளை வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள்

04



## தீர்வு கிடைக்கும் வரை உணவு தவிர்ப்புப் போர்

### யாழ்.மீனவர்கள் நேற்று ஆரம்பிப்பு

### பொலிஸார் இடையூறு

யாழ்ப்பாணம், மார்ச் 20

இந்திய மீனவர்களின் அத்துமீறலை நிறுத்துமாறுகோரி, யாழ்ப்பாண மீனவர்கள் தீர்வுகிடைக்கும்வரை தொடர்ச்சியான உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர். யாழ்ப்பாணக் கடற்பரப்பினுள் அத்துமீறிய

04

### நாடாளுமன்றுக்குள்

## தமிழ் எம்.பி.க்கள் நீதிகோரி குரல்

### சஜித்தும் ஆதரவு



கொழும்பு, மார்ச் 20

" பொலிஸ் அராஜகம் ஒழிக, தொல்பொருள் திணைக்களத்தின் இனவாதத்தை நிறுத்து, பொய் வழக்கை வாபஸ் பெறு" என கோஷங்களை எழுப்பியவாறு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோவிலில் சிவராத்திரி தினத்தன்று நடந்த சம்பவத்தைக்

15

## நீதியை வழங்குங்கள்!

### சஜித் கோரிக்கை

விரிவு:- பக்.04

## விசாரணைக்குத் தயார்!

### நீதியமைச்சர் அறிவிப்பு

விரிவு:- பக்.12




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தட்டிக்கேட்க இந்தியா தயங்கினால் தமிழர்கள் நிச்சயம் தூக்கியெறிவர்!

## பொறுமைக்கும் எல்லையுண்டு என்று எச்சரிக்கிறார் சரவணபவன்



சாவகச்சேரி, மார்ச் 20

**வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரத்தில் தலையிட அதிகாரமுள்ள தரப்பாக இருக்கும் இந்தியா தொடர்ந்தும் மௌனம் காக்குமாக இருந்தால், தமிழ் மக்களின் ஆதரவை முற்றாக இழக்கும். இது வேறு தரப்புகளுக்கு வாய்ப்பாக அமையும் - இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.**

'தென்மராட்சி மெகா பிறிமியர் லீக் 2023' கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் அமைதியாக வழிபாடு நடத்தியவர்கள் கைதாகி மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பிணையில் அவர்கள் வெளியே வந்துவிடக்கூடாது என்பதற்காக தொல்பொருள் சட்டங்களின் கீழ் வழக்குத் தொடுத்துள்ளனர்.

இந்தப் பிராந்தியத்தில் வல்லரசாக நிலைநிறுத்த முயற்சிக்கும் இந்தியாவே, இந்து மதத்தின் காவலனாகவும் தன்னை அடையாளப்படுத்திக்கொள்கின்றது. வெடுக்குநாறிமலையில் நடப்பதும் இந்தியாவுக்குத் தெரியும். ஆனால் இந்தியா மௌனம் காக்கின்றது.

1987ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படை என்ற பெயரில் இங்கு கால்பதித்தபோது எமது மக்கள் மாலை மரியாதையுடன் வரவேற்றார்கள். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குள் அவர்கள் இங்கிருந்து போனால்காணும் என்ற நிலைமை உருவானது. இதை உருவாக்கியது யார்? எமது மக்களிடம் வெறுப்பை அவர்களே சம்பாதித்துக்கொண்டார்கள்.

இறுதிப்போரின்போதுகூட கடைசிக் கணத்திலாவது இந்தியா தலையிட்டு எம்மைக்காப்பாற்றும் எதையாவது செய்யும் என்று ஒவ்வொரு தமிழனும் நம்பிக்கொண்டிருந்தான். ஆனால் அதில் எல்லாம் மண் அள்ளிப்போட்டது இந்தியா. இப்போதும்கூட எமது மக்கள் இந்தியாவை முற்றாக வெறுக்கவில்லை. அவர்களிடம் இந்தியாவைப்பற்றி இருக்கின்ற கடைசி நம்பிக்கையைக் கூட தக்கவைப்பதற்கு அவர்கள் முயலவில்லை என்பதுதான் கவலையாக இருக்கின்றது.

பூகோள அரசியல் போட்டியால் சீனா இங்கு கால்பதித்துவிடக் கூடாது என்பதற்காக சிறிலங்காவின் பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுக்கு முட்டுக்கொடுக்கின்றது இந்தியா. பெரும்பான்மையினத்திடம் சரணாகதி அடைந்திருக்கின்றது இந்தியா. இலங்கையை அதட்டி தமிழருக்கான நீதியைக் கேட்க வேண்டிய இந்தியா, சிங்கள அரசுக்கு சாமரம் வீசிக்கொண்டிருக்கின்றது.

வெடுக்குநாறிமலை விவகாரத்தில் தமிழர்களின் குரலுக்கு பௌத்த - சிங்களப் பேரினவாதத்தில் ஊறித் திளைத்த அரசு செவிசாய்க்கப்போவதில்லை. சிறிலங்கா அரசை கேள்விகேட்கும் இடத்தில் இருப்பது இந்தியா மாத்திரம்தான். ஆனால் இந்தியாவும் தனது பிராந்திய நலனுக்காக அமைதியாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு. ஆனால் இந்தியா அதைச் சீண்டிக்கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களிடத்திலிருந்து இந்தியா தூர விலகிச் சென்றுகொண்டே இருக்கின்றது. இது இந்தப் பிராந்தியத்தில் வேறு சக்திகள் தங்களை நிலைநிறுத்துவதற்கான வாய்ப்பையே ஏற்படுத்தும். வெள்ளம் வந்த பின்னர் அணைகட்டுவதால் பலனில்லை. இந்தியா இதைக் கவனத்தில்கொள்வது நல்லது- என்றார். (ஒ-5)

## ஐ. ம.சக்தி ஆட்சியில் மாகாணசபைத் தேர்தல்

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 20

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்ற பின்னர் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் மாகாணசபைத்தேர்தலும் விரைவில் நடத்தப்படும் என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் காணாமல்ஆக்கப்பட்டுள்ள உள்ளாட்சி மற்றும் மாகாணசபைத்தேர்தல்களையும் நடத்தவேண்டியுள்ளது. அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் மாகாணசபை உருவாக்கப்பட்டது. அந்தச்சபைகளை ஆளுநர்கள்தான் தற்போது நிர்வகிக்கின்றனர். மக்கள் பிரதிநிதிகள் இல்லை. இதுகூட அரசமைப்புமீறல் செயலாகும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியின்கீழ் அதன்பின்னர் கூடியவிரைவில் மாகாண மற்றும் உள்ளாட்சிசபைத் தேர்தல்கள் நடத்தப்படும். மக்களின் வாக்குரிமையை பாதுகாப்போம் என்றும் அவர் தெரிவித்தார். (எ-44)

## 14 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்

### சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் விசாரணை

கொழும்பு, மார்ச் 20

அநுராதபுரத்தில் சிகை அலங்கார நிலையமொன்றில் வைத்து 14 வயதுச் சிறுமியை கூட்டுப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

11 சந்தேகநபர்கள் தன்னை பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர் எனப் பாதிக்கப்பட்ட சிறுமி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையோரை கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## முட்டை இறக்குமதிக்கு அனுமதி

ஏப்ரல்மாதம் 30 ஆம் திகதிவரை முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. உள்ளூர் சந்தையில் முட்டை விலையை நிலையாகப் பேணுவதற்காகவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பண்டிகைக் காலங்களில் தேவைகளுக்காக 42 மில்லியன் முட்டைகளை இறக்குமதிசெய்ய நேரிடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. (எ-இ)



## கோத்தாவின் புத்தகத்தை வாசிக்காத பஸில்

கொழும்பு, மார்ச் 20

கோத்தாபயவின் நூலை நான் இதுவரை வாசிக்கவில்லை, வாசிக்கும் விருப்பமும் இல்லை என்று முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அந்தப் புத்தகம் இதுவரை எனக்குக் கிடைக்கவில்லை. நாமல் கூட அந்தப் புத்தகத்தைப் புத்தகக்கடை ஒன்றிலேயே வாங்கியுள்ளார். அவர்கள் அந்த நூலை வழங்காதது ஒரு பிரச்சினையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## குழந்தைகள் வாகனத்தை பயன்படுத்திய கெஹலிய?

### விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 20

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது பயன்படுத்தியதாகக் கூறப்படும் வாகனம் கைதிகளின் குழந்தைகளை ஏற்றிச் செல்வதற்காக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினால் வழங்கப்பட்டது என முன்வைக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினால் வழங்கப்பட்ட இந்த வாகனம் கைதிகளின் குழந்தைகளை ஏற்றிச் செல்வதற்காக மாத்திரமே பயன்படுத்தலாம், அதில் கைதிகளை ஏற்றிச்செல்லமுடியாது எனும் நிபந்தனையை மீறி கெஹலிய ரம்புக்வெல இந்த வாகனத்தைப் பயன்படுத்தியுள்ளார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## விபத்தில் ஒருவர் சாவு

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் 21 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வாகனம் ஒன்றும் கொள்கலன் ஊர்தி ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்து நடந்துள்ளது. விபத்துத் தொடர்பாக நெடுஞ்சாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கையற்ற மக்கள்!

## ஆய்வில் வெளியான தகவல்

**கொழும்பு, மார்ச் 20**

**இலங்கைத் தீவில் நாடாளுமன்றம் தொடர்பான பொதுமக்களின் நம்பிக்கை முன்னெப்போதும் இல்லாத அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் அண்மையில் நடத்திய கருத்துக் கணிப்பில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

ஆய்வில் வெளியான தகவல்களின் பிரகாரம் பொதுமக்கள் மத்தியில் நாடாளுமன்றம் தொடர்பான நம்பிக்கை தற்போதைக்கு 22 வீதமாக வீழ்ச்சியுற்றுள்ளது. 2011 ஆம் ஆண்டளவில் மக்கள் நம்பிக்கை 63 வீதமாகக் காணப்பட்டிருந்தது. நாடுதழுவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் ஆயிரத்து 350 பேர் இந்த ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனர்.

ஆனாலும் நீதித்துறை தொடர்பான மக்களின் நம்பிக்கை தொடர்ந்தும் அதிகரித்துள்ளது என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. (எ-இ)



## 6,000 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேக்கம்

கொழும்பு, மார்ச் 20

நாட்டில் சுங்கத்துறை அதிகாரிகள் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் அடங்கிய 6,000 கொள்கலன்கள் கொழும்புத்துறைமுகத்தில் தேங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுங்க நிதியத்தை திறைசேரிக்கு உள்வாங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சுங்க அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மேலதிக நேர சேவையிலிருந்து விலகி, போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் . (ச-இ)

## கோப் குழுவிலிருந்து ஏழு பேர் விலகினர்!

கொழும்பு, மார்ச் 20

கோப் எனப்படுகின்ற அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்து ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பதவி விலகியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.மரிக்கார், ஹேசா விதானகே, தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், சுதந்திர மக்கள் சபையின் எம்.பி.சரித ஹேரத், சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, காமினி வலேகொட, எரான் விக்கிரமரத்ன ஆகியோரே இவ்வாறு பதவி விலகியுள்ளனர்.

கோப் குழுவின் தலைமைப் பதவிக்கு பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டுள்ளதற்கு பல தரப்பினரும் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இந்த நியமனத்தின் மீதான அதிருப்தியாலேயே அவர்கள் பதவி விலகியுள்ளனர். (ம-44)



## விவசாய ஏற்றுமதிகள் அதிகரிக்கும் இலாபம்

கொழும்பு, மார்ச்.20

விவசாய ஏற்றுமதிகளால் நாட்டுக்கு அதிக வருமானம் ஈட்டப்படுகின்றது என்று விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தேங்காய் ஏற்றுமதியின் மூலம் வருடாந்தம் 500 மில்லியன் அமெரிக்க டொலர் தற்போது ஈட்டப்படுகிறது. 2023ஆம் ஆண்டு 34 ஆயிரத்து 771 மெற்றிக் தொன் வெற்றிலை ஏற்றுமதி மூலம் 86 ஆயிரத்து 680 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## தடுப்புக்காவலில் கொலை; ஐ.நா. சபைக்கு அறிக்கை

கொழும்பு, மார்ச் 20

இலங்கை பொலிஸ் மற்றும் சிறைச்சாலைகளால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சட்டவிரோத கொலைகள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு விசேட அறிக்கையொன்று வழங்கப்பட்டுள்ளது.

கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழு, சமூகம், மத மையம் (CSR) மற்றும் பெக்ஸ் ரோமனா ஆகியவை இணைந்து ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இந்த அறிக்கையைக் கையளித்துள்ளன.

இதுதொடர்பில் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவின் தலைவர் சுதேஷ் நந்திமால் சில்வா தெரிவிக்கையில்,

சித்திரவதை தொடர்பில் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவரைப் பொலிஸ்மா அதிபராக நியமித்தமை தவறானது.

குற்றவாளியாக இனங்காணப்பட்ட தேசபந்து தென்னக்கோன், பாதிக்கப்பட்டவருக்கு தனது தனிப்பட்ட பணத்தில் இருந்து இழப்பீடு வழங்கவேண்டும் என கடந்த டிசெம்பரில் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## ஜனாதிபதி புலமைப்பரிசில்; விண்ணப்பகாலம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 20

பொருளாதாரச் சிரமங்களுக்குள்ளான சிறார்களுக்கு கல்வியை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்துக்கான காலஅவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதன்படி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கால அவகாசம் ஏப்ரல் 1ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




**த**ண்டனையள் இறுக்கமாயிருந்தால் குற்றங்கள் குறையுமெண்டது உண்மைதான். ஆனால் செய்த குற்றத்தைவிடவும் தண்டனையின்ர தன்மை கூடினால் அது வேறமாதிரி வந்திடும். பிக்மட்சுகளில பள்ளிக்கூடப் பெடியள், ட்ரம்ஸ் அடிச்சு, கொடியளோட ஆடிப்பாடுறதைப் பற்றி பட்சி அண்டைக்குச் சொல்லியிருந்ததெல்லோ. அப்பிடி ஆடிப்பாடுற பெடியள் கொஞ்சம் எல்லைமீறினதையும், அதால சனத்துக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் இடைஞ்சல் வந்ததெண்டும் பட்சி சொன்னது.

அப்பிடி ஆடிப்பாடின பள்ளிக்கூடப் பெடியளுக்கு எதிரா ஒரு 'பெரிய பள்ளிக்கூடம்' கடும் நடவடிக்கை எடுத்திருக்குது. ஆரெல்லாம் றோட்டு வழியளில போய் பள்ளிக்கூடக் கொடியளோட ஆடிச்சினமோ, அவையும், அவையின்ர பெற்றோரும், பக்கத்தில உள்ள பள்ளிக்கூடங்களை போய் சுத்தப்படுத் தோனும் எண்டதுதான் அந்தத் தண்டனை. தங்கட பள்ளிக்கூடத்தில இனிமேல் இப்பிடியான வேலையளில பெடியள் இறங்கக்கூடாது எண்டதுக்காக உடனடியா அந்தப் பள்ளிக்கூடம் நடவடிக்கை எடுத்ததைப் பாராட் டத்தான் வேணும். அதில சந்தேகமில்லை. ஆனால் அதுக்கு குடுக்கப்பட்ட தண்டனை சரியோ எண்டதுதான் இப்ப கேள்வி.

அந்தப் பெரிய பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில கனக்க மகளிர் கல்லூரியள் தான் இருக்கு. அங்கதான் போய் இந்தப் பெடியள் சுத்தப்படுத்துற வேலை செய்யோனும். தங்கட வகுப்பு பொம்பிளைப்பிள்ளையளுக்கு முன்னால, அதுவும் தங்கட தாய், தகப்பனோட போய், கூட்டி, குப்பை அள்ளுற வேலையைச் செய்யேக்க பள்ளிக்கூடப் பெடியளுக்கு கடும் அவமானமா இருக்கும். அப்பிடி அவமானப்படுத்துறது. அந்தப் பெடியளிட்ட மாற்றத்தைக் கொண்டுவாறதைவிடவும், வன்மத்தைத்தான் கூட்டும். சிலவேளைகளில பிள்ளையள் இந்த அவமானத்தால பிழையான வழியளில போகவும் கூடும். தண்டனை குடுக்கத்தான் வேணும். அதில மாற்றுக்கருத்தில்லை. ஆனால் இப்பிடிச் சுத்தப்படுத்துற தண்டனைதான் குடுக்கவேணும் எண்டால் தங்கட சொந்தப் பள்ளிக்கூடத்தை சுத்தம் செய்யிற வேலையைக் குடுத்திருக்கலாம். ஆனால் இப்பிடி பிறத்திப் பள்ளிக்கூடங்களில அதுவும் பொம்பிளைப் பிள்ளையள் மட்டும் படிக்கிற பள்ளிக்கூடங்களில தங்கட பெற்றோரோடபோய் வேலை செய்யிறதெண்டது கடும் மன உளைச்சலைக் குடுக்கிற தண்டனை.

அதைவிட சில கேள்வியளும் இருக்கு. தனிய பொம்பிளைப் பிள்ளையள் படிக்கிற பள்ளிக்கூடங்களில இன்னொரு பள்ளிக்கூடத்துப் பெடியளை வேலை செய்ய விடுறதுபற்றி, தங்கடபாட்டில ஒரு பள்ளிக்கூடம் முடிவெடுக்க ஏலுமோ? அதுக்கு டிப்பார்ட்மெண்டில அனுமதி எடுக்கத் தேவையில்லையோ? இல்லாட்டி பெரிய பள்ளிக்கூடக் குரு செய்தால் குற்றமில்லை எண்டு சட்டமேதும் இருக்கோ? டிப்பார்ட்மெண்டுக்கு இப்பிடி பெடியளை வேலைக்கு அனுப்பினது தெரியாதா? தெரிஞ்சும் தெரியாதமாதிரி இருக்கினமோ? ஒரு குற்றத்தைச் சரிசெய்யவெண்டு வெளிக்கிட்டு, இப்ப பெடியளின்ர மனவுளைச்சலையும் கூட்டி, நடைமுறைக்கு பொருந்தாத காரியங்களையும் செய்திருக்கினம்.

குற்றங்களை உணரவைச்சு திருந்திறமாதிரித் தண்டனை குடுத்தாத்தான் அதில பிரியோசனம். அதைவிட்டிட்டு இன்னும் குற்றம் செய்யத்தூண்டுற மாதிரி தண்டனை குடுத்தால் அந்தத் தண்டனையே குற்றமாகிடும்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்ப்பாணத்தில் நேற்று

# பண்பாட்டு அழிப்புக்கு எதிராக பல்கலை. மாணவர்கள் போராட்டம்!

### வீதிமறியலால் போக்குவரத்தும் பாதிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 20**

**தொல்லியற் போர்வையிலான பண்பாட்டு அழிப்பு, சிங்கள - பௌத்த மயமாக்கல் என்பவற்றை உடன்நிறுத்துமாறு வலியுறுத்தியும், வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் திட்டமிட்டுக் கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதி கோரியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் பல்கலைக் கழகத்துக்கு முன்பாகப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களில் ஒருபகுதியினர், திடீரென சேர் பொன். இராமநாதன் வீதியை இடைமறித்து வீதி மறியல் போராட்டத்திலும் குதித்தனர். இதனால், சுமார் 20 நிமிடங்களுக்கு மேலாக குறித்த வீதியுடனான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

கவனவீர்ப்பு மற்றும் வீதிமறியல் போராட்டங்களில் பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்சங்கத்தினர், பல்கலைக்கழகஊழியர் சங்கப் பிரதிநிதிகள் என நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர். போராட்டங்களில் கலந்துகொண்டவர்கள் வெடுக்குநாறிமலை எங்கள் சொத்து!, குருந்தூர்மலை எங்கள் சொத்து!, தையிட்டி எங்கள் சொத்து!, மயிலத்தமடு எங்கள் சொத்து, நீராவியடிஎங்கள்சொத்து, திருகோணமலை எங்கள் சொத்து, அபகரிக்காதே! அபகரிக்காதே! தமிழர் நிலங்களை அபகரிக்காதே!, ஆக்கிரமிப்பு இராணுவமே வெளியேறு!, கொவிட்-19 ஐ விடக் கொடூரமானது தொல்லியல் திணைக்களம்!, ஆக்கிரமிப்பதில் புத்தனுக்கு என்ன அவ்வளவு காதலா?, நிறுத்து! நிறுத்து! திட்டமிட்ட கைதுகளை உடன் நிறுத்து!, பண்பாட்டுப் படுகொலையை உடன் நிறுத்து!, எடுப்பது பிச்சை! ஆக்கிரமிப்பது தமிழர் நிலமா?, ஒருபுறம் நல்லிணக்கப் பேச்சு! மறுபுறம் ஆக்கிரமிப்பு!, வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்!, நீதி இல்லாத நாட்டில் நீதிமன்றங்கள் எதற்கு?, ஒருநாட்டில் இரு சட்டங்களா? உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியும், பதாகைகளைத் தமது கைகளில் ஏந்தியும் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை, போராட்டம் இடம் பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சூழலில் இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்தனர். (அ-66)

## வாக்குகளுக்காகவே...

நிராகரித்துவிட்டனர். எனவே தமது இருப்பையும், வாக்குகளையும் தக்கவைத்துக்கொள்வதற்காகவே அவர்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் தமிழ் எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியவை வருமாறு:-

" இங்கு விவாதத்துக்குள்ளாகி இருக்கும் (வெடுக்குநாறி) இடமானது வவுனியா, வடுனாகல எனப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க பௌத்த புராதன இடமாகும். இந்த இடத்துக்கு சில அடிப்படைவாத, மதவாதக் குழுக்கள் அண்மைக்காலமாகச் சென்று, வழிபாடுகளில் ஈடுபடுகின்றன. மாலை 6 மணிவரை மட்டுமே வழிபாடு நடத்துவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. ஆனால் 6 மணி கடந்தும் இங்கு நிலைகொண்டிருப்பதற்கு அவர்கள் முற்பட்டதால் தான் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

தொல்லியல் பெறுமதிமிக்க இடத்தில் சட்டவிரோத நடவடிக்கை இடம்பெறின் அதற்கு எதிராகச் சட்டத்தைச் செயற்படுத்தவே தொல்லியல் திணைக்களம் உள்ளது.

இந்த நாட்டில் உள்ள பௌத்தர்கள் இந்துக் கோவிலுக்கு முன்னால் சென்று பௌத்த வழிபாட்டில் ஈடுபடுகின்றனரா? அவ்வாறு நடப்பதில்லை.

இனவாத அரசியல்வாதிகளை கிழக்கு மாகாண தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டனர். வடக்கிலும் அவ்வாறுதான். தற்போது இவர்களின் அரசியல் இருப்பு ஆட்டம் கண்டுள்ளது. அதனைத் தக்கவைப்பதற்கே இவ்வாறான செயலில் ஈடுபடுகின்றனர். பௌத்த இடங்களுக்குள் நுழைந்து தேவையற்ற குழப்பங்களைஏற்படுத்தும்நடவடிக்கைநிறுத்தப்படவேண்டும்" - என்றார். (அ-44)

## தீர்வு...

இந்திய ரோலர் மீன்பிடியாளர்களைக் கட்டுப்படுத்துமாறு யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகத்துக்கு முன்பாக யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளனமும், யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து தொடர்ச்சியான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்க முயன்றன. அப்போது அவ்விடத்துக்கு வந்த பொலிஸார், 'தூதரகத்துக்கு முன்பாகப் போராட்டம் நடத்த அனுமதிக்கமுடியாது' எனத் தெரிவித்தனர்.

இதன்போது முரண்பட்ட மீனவர்கள் 'எமது கோரிக்கை தூதரகத்துக்குத் தெரிய வேண்டும் . எனவே போராட்டத்துக்கு அனுமதியுங்கள்' எனக் கோரினர்.

சிறிதுநேரம் யோசித்த பொலிஸார் 'ஐந்து நிமிடம் மட்டும் தூதரகத்துக்கு முன்பாக நின்றுபோராடலாம்' எனக் கூறி போராட்டத்துக்கு அனுமதித்ததுடன் பின்னர் மீனவர்களை அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தினர்.

இதனையடுத்து யாழ். புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலயத்துக்கு முன்பாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை மீனவர்கள் தொடர்ந்தனர். தீர்வு கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என மீனவர்கள் அறிவித்துள்ளனர். (அ-26-27)

## நீதியை ...

"எந்த இனத்தவராக இருந்தாலும் அவர்கள் எல்லோருக்கும் மத சுதந்திரம் இருக்கவேண்டும். பொலிஸ்மா அதிபரை அழைத்து இதுபற்றி எடுத்துரைக்கவும். சுயா தீன விசாரணையை முன்னெடுத்து நீதியை வழங்குங்கள்" - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதி சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள், சபாபீடத்துக்கு முன்பாகத் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் அவ்விடத்துக்கு வருகைதந்த, எதிர்க்கட்சித் தலைவர், பிரதி சபாநாயகருடன் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

"இவர்களின் (தமிழ் எம்.பி.க்களின்) கோரிக்கை தொடர்பில் பதிலொன்றை வழங்குங்கள், அவ்வாறு வழங்கினால் இவர்கள் சென்றுவிடுவார்கள், தீர்ப்பை வழங்குங்கள். மத சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பன அடிப்படை உரிமைகளாகும். மத சுதந்திரத்தைப் பாதுகாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். எனவே, சுயாதீன விசாரணையை முன்னெடுத்து நீதியைப் பெற்றுத்தருமாறு நீதி அமைச்சரிடம் கேட்டுக்கொள்கின்றேன்" எனவும் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார். (அ-44)

## ஆப்கனில் நிலநடுக்கம்

காபூல், மார்ச் 20

ஆப்கானிஸ்தானில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. அதிகாலை 6 மணியளவில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.3 ஆகப் பதிவாகியுள்ளது என்று புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, கடந்த 17 ஆம் திகதி ஆப்கானிஸ்தானில் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது. (எ-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சங்கடங்கள் ஏற்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். திடீர்ச் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** அனுகூலமான நாள். முயற்சிகள் சாதகமாகும். செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உடல் நலனில் கவனம் தேவை. அம்பிகையை வழிபட மற்றவர்களால் ஏற்பட்ட அவப்பெயர் நீங்கும்.

**மிதுனம்:** பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும். துர்க்கை வழிபாடு அளவற்ற மகிழ்ச்சியைத் தரும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். ஆதாயமும் கிடைக்கும். பணவரவு மகிழ்ச்சி தரும். இலாபமும் கூடுதலாக கிடைக்கும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். இலாபம் கிடைக்கும். தட்சிணா மூர்த்தியை வழிபட தடைகள் விலகும்.

**கன்னி:** உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பப் பெரியவர்களுடன் கலந்து பேசி முக்கியமான முடிவு எடுங்கள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. நிதானம் தேவை. முருகப்பெருமானை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.

**துலாம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம் :** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள் செலவுகளால் கடன் வாங்க நேரிடும். சங்கடங்கள் ஏற்படக்கூடும். உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். வாழ்க்கைத்துணை நீண்டநாள்களாக கேட்டுக் கொண்டிருந்ததை வாங்கித் தருவீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். நிம்மதி பெறுவீர்கள். திடீர்ச் செலவுகள் ஏற்படும்.

**கும்பம்:** புதிய முயற்சிளை தொடங்குவது நல்லது. உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். இளைய சகோதரரால் சங்கடங்கள் ஏற்படும். தாயாரின் உடல்நலனில் கவனம் செலுத்தவும். இலாபம் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் மேலோங்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். மகிழ்ச்சியும் உற்சாகமும் கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு, பாடசாலை மைதானத்தில் அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (ப-159)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலராகக் கடமையாற்றி தற்போது யாழ்.மாநகரசபை ஆணையாளராக இடமாற்றல் பெற்றுச் சென்ற சி.கிருஷ்ணேந்திரனுக்குப் பளை இந்திராபுரம் கிராம மக்களால், பிரிவுபசாரவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது. கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் வி. துயாஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற விழாவில், முகமாலை 'அன்பே சிவம்' அறக்கட்டளை நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் பொதுநோக்கு மண்டபத்தின் வளாகத்தில் வைத்து பிரதேச செயலரால், பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ப-9)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ரங்கன் குடியிருப்பு கிராமத்துக்கு நீண்ட காலத்தின் பின் பஸ் சேவை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (எ-113)





பருத்தித்துறையிலுள்ள ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்கள் இருவருக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சைக்கிள்கள் வழங்கப்பட்டன. மயிலிட்டியைச் சேர்ந்த தற்போது சுவிட்ஸர்லாந்தில் உள்ள இ.றொவேனாவின் பிறந்த நாளை முன்னிட்டு இவை வழங்கப்பட்டுள்ளன. (எ-100)



"மைலோ" நிறுவனத்தால் அண்மையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் 12 வயது கீழ்ப் பிரிவு சம்பியனாகியது. (எ-75)

புதிய உயர் கல்வி நிறுவனத்தின் இயக்குநரான காலம் சென்ற திருமதி அருள்நங்கை சண்முகநாதன் சேகரித்த பல இலட்சம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி நூல்களை அவரது சகோதரர்களான ஓய்வுநிலை ஆசிரியை திருமதி ராஜநங்கை சிவபாலனும், ராஜரட்ணம் பாலபாஷ்கரும் இணைந்து இணுவில் பொதுநூலகத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை கையளித்தனர். (எ-66)







மன்னார் மாவட்டச் செயலகமும், சமூகசேவைகள் திணைக்களமும் இணைந்து நடத்திய மன்னார் மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட தடகள விளையாட்டுப் போட்டிகள், உதவி அரசாங்க அதிபரின் தலைமையில் மன்னார் மாவட்ட நகரசபை மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றன. (எ-213)



இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி, வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு இடம் பெற்றது. அதிபர் உ.தனசங்கர் தலைமையில், நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணக்காளர் திருமதி சுதர்சினி சதீஸ்கண்ணா, சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபையின் அபிவிருத்தி உத்தியோகத்தரும் பழைய மாணவியுமான திருமதி சுமதி நவரத்தினம், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (எ-159)



மாந்தை மேற்கு பிரதேச செயலகம் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம், மாந்தை மேற்குப் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (எ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலப்பதிகாரம் என்பது அருங்கலைப் பெட்டகம்

## தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நடனத்துறை முனைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

சிலப்பதிகாரம் ஓர் அருங்கலைப் பெட்டகம். இசைக்குரிய இலக்கணங்கள், நாட்டியத்துக்குரிய இலக்கணம், நாட்டியம், இசைக்குரிய பாடல் வகைகள் என்பன சமணத் துறவியான இளங்கோ அடிகளுக்கு எவ்வாறு கைவரப் பெற்றது? என்பது மிகவும் வியப்புக்குரியது என தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நடனத்துறை முனைவர் செ.கற்பகம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம் இந்திய - இலங்கை நட்புறவுக் கழகத்துடன் இணைந்து நடத்திய சிலப்பதிகார விழாவின் மாலை அமர்வு கடந்த சனிக்கிழமை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெற்றபோது முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிலப்பதிகாரம் எமது தொன்மை இலக்கியம். ஆடல் இலக்கியம் என்றெல்லாம் நாம் சொல்லிக் கொண்டிருக்கின்றோமே தவிர அதிலுள்ள பாடல்களை நாட்டிய வடிவங்களின்போது கருத்திற் கொள்வதில்லை. ஒரு சில இடங்களில் மங்கள வாத்தியப் பாடல்களை மாத்திரம்தான் கையாளுகிறார்கள். இந்தநிலை மாற வேண்டும். நாட்டிய வடிவங்களில் சிலப்பதிகாரப் பாடல்களை உள்ளடக்கவேண்டும்.

முன்னைய காலத்தில் நாட்டியப் பயிற்சியளித்தபோது ஒரு ஜதியைச் சொல்லிக் கொடுக்கும்போது கையில் தாளம் போட்டு நாங்கள் சொன்ன பின்னர்தான் ஆடவே விடுவார்கள். ஏனெனில், கையில் தாளம் நின்றால் தான் காலில் தாளம் நிற்கும். அதனால், தான் முன்னைய காலங்களில் நாட்டியப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டவர்கள் அதனுடன் இணைந்து மிருதங்கப் பயிற்சியையும் பெற்றுக் கொண்டார்கள். மிருதங்கப் பயிற்சி மூலம் தான் தாளம் தன்வயப்படும் - என்றார். (ம-66)

# சிறிய செயற்றிட்டங்களால் கூட பெரிய மாற்றங்கள் சாத்தியம்



## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

**நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில், சிறிய செயற்றிட்டங்கள் ஊடாகக்கூட பெரிய மாற்றத்தை ஏற்படுத்தமுடியும் என வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ரோட்டரிக் கழகத்தின் தலைவர் தெரிவு மற்றும் பயிற்சி மாநாட்டின் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போலியோத் தடுப்பு மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் சிகிச்சை உள்ளிட்ட சிறந்த சேவைகளை ரோட்டரி கழகம் முன்னெடுத்துச்செல்வது மகிழ்ச்சியைத் தருகின்றது. வசதிகள் இல்லாத மாணவர்கள் பாடசாலைக் கல்வியைத் தவிர்த்து வரும் சூழலில், வடக்கு மாகாணத்தில் கற்றல் வசதிகள் இல்லாதவர்களை அடையாளம்கண்டு அவர்களுக்கு உதவுவதற்கு ரோட்டரிக் கழகம் முன்வந்துள்ளமை பாராட்டப்பட வேண்டியது. ஏனெனில், கல்வியால் முழு சமூகக் கட்டமைப்பையும் மாற்றமுடியும். வடக்கில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்கான செயற்றிட்டங்களை அனைவரும் இணைந்து முன்னெடுக்கவேண்டும். நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில், சிறிய செயற்றிட்டங்கள் ஊடாகக் கூட பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் - என்றார். (ம-26)

# இந்துபுரம் - சாந்தபுரம் வீதியைச் சீரமையுங்கள்

## பிரதேச மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இந்துபுரம் கிராமத்துக்கும், கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்துக்குமான இணைப்பு வீதியைச் சீரமைக்கவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதியை இரு கிராமங்களையும் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துகின்றன. இந்த வீதி சீரமைக்கப்படாமையால், மழை காலத்தில் வீதியை மக்கள் பயன்படுத்தமுடியாமல் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர் என்று இந்துபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த வீதியைச் சீரமைக்கும் நடவடிக்கைகள் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தால் தொடங்கப்பட்டுப் பின்னர் கைவிடப்பட்டுள்ளன. வீதி சீரமைப்புத் தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் பயனில்லை. மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியைக் கருத்திற்கொண்டு இந்த வீதியைச் சீரமைத்துத் தர வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-13)

# தீ மூட்டும்போது அவதானம் தேவை

## மன்னார் பிரதேச செயலாளர் அறிவுறுத்து

யாழ்., மார்ச் 20

தற்போது கடுமையான வெப்ப சூழ்நிலை நீடித்து வருவதால் பொதுமக்கள் குப்பைகளுக்குத்தீவைக்கும்போது கவனம் செலுத்தவேண்டும் என்று மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீபன் அறிவுறுத்தியுள்ளார்.

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை பனங்காடு பகுதியில் திடீரெனப் பரவிய தீயால் பனைகள் அழிவடைந்ததுடன், வீடொன்றும் சேதமடைந்தது. கடும் வெப்பநிலை காரணமாக இலகுவாகத் தீ பரவும் அபாயமும் காணப்படுகிறது.

பொதுமக்கள் சுற்றுச் சூழலை துப்புரவு செய்தபின் அவற்றை தீ மூட்டும்போது மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இதுதொடர்பில் அக்கறையின்றிச் செயற்பட்டால் பெரும் உயிர், பொருள் சேதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ச-60)

# சுதந்திரபுரத்தில் கசிப்பு அமோகம்

## கட்டுப்படுத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 20

சுதந்திரபுரம் கிராமத்தில் அதிகரித்து வரும் கசிப்பு விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்குப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதிகளவு கசிப்பு விற்பனை மேற் கொள்ளப்படுவதால் குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளன என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ப-13)



# அவுஸ்திரேலியத் தூதரகக் குழு யாழ். பல்கலைக்குப் பயணம்

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதரகத்தின் அரசியல் மற்றும் பொருளாதாரத்துக்கான முதல் செயலாளர் கலாநிதி போல் செக்கோலா தலைமையிலான குழுவினர் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் சென்றுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவை சந்தித்து அவர்கள் கலந்துரையாடியதுடன் கடல்சார் வள மற்றும் கடலோரப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுத் திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் கேட்டறிந்தனர்.

அத்துடன் அவுஸ்திரேலிய அரசின் நலனோம்புத் திட்டங்கள், சட்டவிரோத புலம்பெயர்வு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான சமூக மட்டச் செயற்றிட்டங்கள் ஆகியவை குறித்தும் கலந்துரையாடினர். (ச-66)

# முத்துஐயன்கட்டுக்குளம் சிறுபோகத்துக்குத் திறப்பு

முல்லைத்தீவு, மார்ச் 20

முல்லைத்தீவு, முத்துஐயன்கட்டுக்குளம் வான்பயிர்கள் மற்றும் கால்நடைகளின் குடிதண்ணீர் என்பவற்றுக்காக நேற்று முன்தினம் திங்கட்கிழமை திறந்து விடப்பட்டுள்ளது.

முத்துஐயன்கட்டுக்குள விவசாயிகளுடனான கலந்துரையாடலின்போது விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளை உடன் தீர்க்கும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 31 ஆம் திகதி சிறுபோக நெற்செய்கைக்காக குளத்தின் நீர் முழுமையாகத் திறந்துவிடப்படும் என்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்தார். (ச-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இனியும் தொடரக்கூடாது

வெடுக்குநாறிமலையில், சிவராத்திரி தினத்தன்று வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது பொலிஸாரால் மிருகத்தனமாகக் கைதுசெய்யப்பட்ட எண்மர் மீதான வழக்கைத் தள்ளுபடி செய்து, அவர்களை விடுவித்திருக்கிறது வவுனியா நீதிமன்றம். நிரூபிக்கமுடியாத குற்றச்சாட்டுக்காகத்தான் அந்த எண்மரும் மிருகத்தனமாக, அரை நிர்வாணமாக்கப்பட்டு அதிகாரத்தின் இரும்புக்கரங்களால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தனர். அத்தோடு நில்லாமல், ஏதோ அதிபயங்கரக் குற்றவாளிகள் போல அவர்கள் கைவிலங்கு கழற்றப்படாமலேயே மருத்துவமனையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்தனர். நாட்டில் கொடூரக்கொலைகள் புரிந்தவர்களும், போதைப்பொருள்களைக் கடத்தியவர்களும், கோடிக்கணக்கான பணத்தை மோசடி செய்தவர்களும், காணிகளை அபகரித்தவர்களும் சுதந்திரப்பறவைகளாக உலாவருகையில், ஆதிசிவனை மனமுருக வழிபட்டார்கள் என்ற காரணத்துக்காக பொய்க் குற்றச்சாட்டுச்சுமத்தப்பட்டு கைது செய்வதும், வாரக்கணக்கில் சிறையிடுவதும் தொடர்ந்தபடிதான் இருக்கின்றது.

வெடுக்குநாறிமலையில் சிங்கள- பௌத்த பேரினவாதத்தின் ஏவுதலால் பொலிஸாரும், தொல்லியல் திணைக்களத்தினரும் வெறியாட்டம் ஆடுவது இப்போதுதான் என்றில்லை. அந்தமலையில் புத்தரைக் குடிவைக்க அவர்கள் திட்டமிட்ட நாள்முதலே அவர்களின் காய்நகர்த்தல்களும், தடைகளும், கைதுகளும், கண்காணிப்புகளும் ஆரம்பித்துவிட்டன. தனிநாட்டுக்காகப் போராடிய இனத்தை இப்போது தங்களின் மத வழிபாட்டுக்காகக் கூடப் போராடவேண்டிய நிர்ப்பந் தத்தை சிங்கள- பௌத்த பேரினவாதம் வெடுக்குநாறிமலை யில் மட்டுமல்லாது, குருந்தூர்மலை, முல்லைத்தீவு நீராவியடி, கன்னியாய், உருத்திரபுரம் சிவன்கோயில், தையிட்டி என இன்னோரன்ன இடங்களில் வலிந்து ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக தமிழ்- சிங்கள எல்லையோரக் கிராமங்களில் உள்ள மலைகள், மரங்கள், கோயில்கள் என்பனவே புத்தர் சிலையை நிறுவுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டு, அங்கு முன்னொரு காலத்தில் விகாரை இருந்ததாக புனைவொன்று பரப்பப்பட்டு, அதற்குத் தொல்லியல் திணைக்களத்தின் ஆதரவும் பெறப்பட்டு, பின்னர் பொலிஸ் பிடிக்குள் கொண்டு வரப்படும். சிங்கள- பௌத்த பேரினவாத வேலிக்கு சாட்சி சொல்லும் ஓணான்களான இலங்கைத் தொல்லியல் சட்டங்கள் அபாயகரமானவை. தொல்லியல் சின்னமொன்றைச் சேதப்படுத்தினால் அல்லது கவர்ந்தால் அது பிணையில் கூட வரமுடியாதளவுக்குப் பாரதூரமான குற்றமாகக் கருதப்படும். அதனை வைத்துத்தான் தொல்லியல் திணைக்களமும், பொலிஸ் திணைக்களமும், சிங்கள - பௌத்த பேரினவாதமும் முக்கூட்டணி அமைத்து தமிழ் மக்களை இம்சித்து வருகின்றன.

வெடுக்குநாறிமலையில்கூட, தொல்லியல் சின்னத்தைச் சிதைத்து ஏணிப்படி அமைத்தார்கள், அடுப்பு மூட்டினார்கள் என்று சிறுபிள்ளைத்தனமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, கைது செய்து எப்படியாவது அந்த மலைக்கு மக்களை வரவிடாமல் தடுப்பதிலேயே பொலிஸாரும், தொல்லியல் திணைக்களத்தினரும் குறியாக இருக்கின்றனர். ஆனால் இதே வெடுக்குநாறிமலையில் அமைக்கப்பட்டிருந்த ஆதிசிவன் உள்ளிட்ட விக்கிரகங்களை அடித்துடைத்தவர்களை இதுவரையும் கண்டுபிடிக்க முடியாமல் இதே தொல்லியல் திணைக்களமும், பொலிஸாரும் கையாலாகாத்தனத்தோடு இருக்கின்றனர். சைவத்துக்கும், ஆதிசிவனுக்கும் இடையூறு செய்வோரை கண்டும்காணாமல் இருக்கும் பொலிஸாருக்கும் தொல்லியல் துறையினருக்கும், தமிழ் மக்கள் சிவனை வழிபடச் செல்லும் சந்தர்ப்பங்களில் மட்டும் ஆயிரம் மடங்கு பலமும், தொல்லியல் மீதான திடீர்ப்பாசமும் வந்துவிடுவது புத்தரின் அனுக்கிரகமாகத்தான் இருக்கவேண்டும். இப்போது பொலிஸாரின் பொய்வழக்கில் இருந்து எண்மரும் விடுதலையாகிவிட்டனர். ஆனாலும், இந்தப் பதினொரு நாள்களும் அவர்கள் சிறையிலிருந்ததால் ஏற்பட்ட உடல், உள நெருக்கீடுகளுக்கு என்ன நிவாரணம்? இனியும் இவ்வாறான பொய்வழக்குகளைப் போட்டு தமிழ் மக்களை வலிந்து சிறைக்குள் தள்ளும் போக்கை தொடரவிடக்கூடாது. அதற்கு தமிழ் மக்கள் மிகப்பெரும் அழுத்தங்களை அரசாங்கத்துக்குத் தொடர்ச்சியாக வழங்கவேண்டும். நாடாளுமன்றத்தில் தமிழ் எம்.பி.க்கள் நேற்று நடத்திய போராட்டம் இதற்கான ஆரம்பப்புள்ளியாக அமையட்டும்.




# இந்திய அரசைக் கண்டித்து திருவோடு ஏந்திப் போராட்டம்

### இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 20
இலங்கைக் கடற்படையினரால் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 21 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களை விடுவிக்குமாறு கோரியும், இந்திய மத்திய அரசு இந்த விடயத்தில் தலையிடவேண்டும் என வலியுறுத்தியும் இராமேஸ்வரம் மீனவர்கள் கடலுக்குள் இறங்கி திருவோடு ஏந்திப் போராட்டம் நடத்தவுள்ளனர். இந்தக் கைதையடுத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்திய அவசர ஆலோசனைக்கூட்டத்தின் பின்னரே இந்த முடிவுக்கு இராமேஸ்வரம் மீனவர்கள் வந்துள்ளனர். எதிர்வரும் 26ஆம் திகதி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-100)

## தொழில்முயற்சி ஊக்குவிப்பு ரூ.100 மில். கடன்!

கொழும்பு, மார்ச் 20
ஆசிய அபிவிருத்தி வங்கி, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு உதவுவதற்காக இலங்கைக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தினூடாக பெண்கள் தலைமையிலான தொழில்முயற்சிகளுக்கான மானியங்களை ஈடுகட்டுவதற்கு 5 இலட்சம் அமெரிக்க டொலர் விசேட வசதியும் வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## சலுகைத் திட்டம் அறிமுகம்

கொழும்பு, மார்ச் 20
மின்சார இணைப்பை புதிதாகப் பெறும்போது கட்டணம் செலுத்துவதற்குரிய புதிய வழிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. அதற்கமைய புதிய மின்சார இணைப்புக்கான முழுத் தொகையில் 25 சதவீதத்தை முற்பணமாகச் செலுத்தவேண்டும். மீதியை தவணைகளில் செலுத்த வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)



## நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைவு

கொழும்பு, மார்ச் 20
நாட்டில் தற்போது நிலவும் மிகவும் வறட்சியான காலநிலை காரணமாக 18 பிரதான நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து ஆபத்தான நிலையில் உள்ளது என்று நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.
லபுகம மற்றும் கலடுல நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் இன்னும் இரண்டு மாதங்களுக்கே போதுமானது என்றும், தற்போது கண்காணிப்பு அமைப்பின் கீழ் 16 நீர்வழங்கல் அமைப்புகளில் நீர் விநியோகிக்கப்படுகின்றது என்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (எ-இ)

## காஸா நிதியத்தில் 58 இலட்சம் ரூபா!

கொழும்பு, மார்ச் 20
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கு அமைவாக காஸாவில் இடம்பெற்றுவரும் மோதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட காஸா குழந்தைகள் நிதியத்துக்கு இதுவரை 57 லட்சத்து 73 ஆயிரத்து 512 ரூபா கிடைத்துள்ளது. (ச-இ)

### நாளை

21.03.2024
வியாழக்கிழமை
பங்குனி–8

சுபநேரம் : 07.47 - 09.17
ராகுகாலம் : 01.47 - 03.17

### நாளொரு நல்வார்த்தை

நீ விரும்பாததை
யார் சொன்னாலும் செய்யாதே
நீ விரும்புவதை உலகம்
எதிர்த்தாலும் செய்துமுடி
– லெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கரைச்சி, புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவமானது பிரம்பு வழங்கல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி, தொடர்ந்து பண்டமெடுக்கும் நிகழ்வும் நடைபெற்றது.**

பாரம்பரிய முறைப்படி பண்டம் எடுத்துச் செல்லப்பட்டு மீசாலை, புத்தூர்ச் சந்தியில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தில் தரித்து நின்று பூசை வழிபாடுகள் இடம் பெற்று, 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஆலயத்தை வந்தடைந்து, சேகரிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு பொங்கல் உற்சவ நிகழ்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ப-113)



**மன்னார், புனித சவேரியார்புரம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு மாணவிக்கு சைக்கிளும், பத்து மாணவர்களுக்குப்** பாதணிகளும், எட்டு மாணவர்களுக்குச் சீருடைத் துணிகளும் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. புலம்பெயர் நாட்டில் வதியும் நெல்லியடியைச் சேர்ந்த பா.மதி மற்றும் கெயார் லங்கா பவுண்டேசன் இணைப்பாளர் றொட்டேரியன் ஆர்.றொபின் ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் ஜேம்ஸ் கொலிங்டன் என்பவரால் இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ப-9)



முல்லைத்தீவு, தேவிபுரம் அ.த.க. பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. பாடசாலை அதிபர் பா.சற்குணசீலன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சு.வினோநோகராதலிங்கம் கலந்து கொண்டார். (ப-13)



கோண்டாவில் கிழக்கு, ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய சோபகிருது வருட பங்குனி உத்தர மஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து பத்துத் தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக ஆலய மஹோற்சவம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10.50 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ப-66)



குப்பிழான் கேணியடி ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து பத்துத் தினங்கள் இந்த ஆலய அலங்கார உற்சவம் நடைபெறும் என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

கிளிநொச்சி, முழங்காவில் மகா வித்தியாலயத்தில், சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு, அதிபர் ப.ஆனந்தராசா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பூநகரி பிரதேச குழுக்களின் சாரண ஆசிரியர் யஸ்ரின், பாடசாலையின் பிரதி அதிபர் மற்றும் உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-159)





யாழ்.மயிலணி சைவமகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டி மயிலணி முருகமூர்த்தி ஆலய வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ப-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்வியில்லாத
ஆன்மா
பணி செய்யாத
சலவைக் கல்
- எடிசன்



துவர்ஷியா சதீஸ்குமார்
ஊடக கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



# சட்டி பறபற பானை பறபற...!

விமானத்தில் மனிதர்களைத்தானே ஏற்றுவார்கள்! இது என்ன சட்டிகளும், பானைகளும் பறக்கின்றன என்று ஆச்சரியப்படுகிறீர்களா! ஆம், யாழ்ப்பாணத்துச் சட்டிகளும் பானைகளும் இப்போதெல்லாம் விமானத்தில்தான் பறக்கின்றன.

நவநாகரிகம் எனும் போர்வையில் நாம் தொலைத்த எமது கலாசாரங்கள் ஏராளம். உலகத்துக்கே பல அறிவியல் கற்றுக் கொடுத்த நாம் இன்று அவற்றை மறந்துவிட்டோம். நாம் மறந்ததை மேற்கத்தேய நாடுகள் பின்பற்றத் தொடங்கியுள்ளன. அந்நிய நாட்டு சந்தைகளில் மண்ணால் செய்யப்பட்ட பாத்திரங்களுக்கு அதிக கேள்வி நிலவுகிறது. யாழ்ப்பாணத்துத் தொழிற்சாலையில் இருந்தே மாதாமாதம் அதிகப்படியான மட்பாண்டங்கள் லண்டன், கனடா, அமெரிக்கா போன்ற பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

◎ ◎ ◎ ◎

யாழ்ப்பாணத்தில் கல்வியங்காட்டுப் பிரதேசத்தில் உள்ள ஆடியபாதத்தில் ஒரு மண்பாண்டம் செய்யும் கைத்தொழிற்சாலை உள்ளது. ரவிக்குமார் என்பவரின் முயற்சியில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இந்தத் தொழிற்சாலை இயங்கிவருகிறது. இந்த மட்பாண்ட உற்பத்திக்கு இவரின் குடும்ப உறுப்பினர்களின் பங்களிப்பும் மிகவும் முக்கியமானது. யுத்தம் மற்றும் கொரோனா காலத்தில் கூட இந்த மட்பாண்ட உற்பத்தி பாதிப்படையாமல் தொடர்ந்து இயங்கிவந்திருக்கிறது. பெரும் சிரமங்களுக்கு மத்தியிலும் இவர்களுடைய குடும்பம் பரம்பரை பரம்பரையாக செய்துவந்த இந்தத் தொழிலை தற்போதும் கைவிடாமல் மேற்கொண்டு வருகின்றனர். வெளிநாடுகளுக்கு மட்பாண்டங்கள் ஏற்றுமதியாகும் பிரதான தொழிற்சாலைகளில் ஒன்றாக இந்த மட்பாண்டத் தொழிற்சாலையும் காணப்படுகின்றது. ஆறு மாதங்களுக்கு முன்னரே மேற்கத்தேய நாடுகளில் உள்ள கடைகளும் வணிக வளாகங்களும் தமக்குத் தேவையான சட்டிகள், பானைகள் மற்றும் இதர மட்பாண்டப் பொருள்களை இந்தத் தொழிற்சாலையிடம் விண்ணப்பித்து விடுகின்றன. இதைத் தொடர்ந்து அவை உரிய முறையில் சிறந்த தரத்துடன் செய்யப்பட்டு வெளிநாடுகளுக்குப் பறக்கவிடப்படுகின்றன.

பல வோல்ட் மின்சாரத்தை காலிசெய்து, தண்ணீரைக் குளிர வைப்பதற்கு கண்டுபிடித்த பிரிட்ஜ் தொழில்நுட்பத்தை எம் கிராமத்து விஞ்ஞானிகள் வெறும் மண்பானையை வைத்துச் செய்து காட்டிவிட்டனர். எமது மூதாதையர்கள் களிமண்ணினால் செய்யப்பட்ட வீட்டு உபயோகப் பொருள்களைப் பயன்படுத்தி வந்தனர். அவர்கள் செய்த உணவுகள், கூடுதல் ருசியுடனும், நீண்ட நாள்களுக்குக் கெடாமலும் இருந்தன. ஆனால், அந்தப் பண்பாடுகளைத் தொலைத்துவிட்டுப் பயணித்துக் கொண்டிருக்கும் நாம் இன்று எதைத்தான் சாதித்துள்ளோம்? என்ற கேள்வி எழுவது இன்று தவிர்க்கப்படமுடியாததாகின்றது. களிமண் மற்றும் தண்ணீரின் கலவையானது மட்பாண்ட உற்பத்திக்கான மூலப்பொருளாகிறது. களிமண்ணிலிருந்து குவளைகள், கிண்ணங்கள், குடங்கள் மற்றும் பிற கொள்கலன்களை உற்பத்தி செய்ய மனிதகுலம் நீண்ட காலமாக கற்றுக்கொண்டது. அன்றாட வாழ்வோடு பிணைந்திருந்த அவை காலப்போக்கில் காணாமற்போயின. அத்துடன், அம்மிகளும், உரல்களும் மிக்ஸி, கிரைண்டர்களாக மாறிவிட்டன. ஆனால் பிற்போக்குத்தனமான இந்த மாற்றத்தால் எமக்கான வாழ்வை எம்மால் வாழமுடியவில்லை என்பதே உண்மை.

◎ ◎ ◎ ◎

இயற்கையின் மகத்துவத்தை உணர்ந்து, நாம் கொஞ்சம் கொஞ்சமாய் மீண்டும் திரும்பிக் கொண்டிருக்கிறோம். குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருக்கும் தண்ணீரைவிட மண்பானையில் வைத்திருக்கும் நீரை விரும்பி அருந்துபவர்களின் எண்ணிக்கை சமீப காலமாக அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது.

மட்பாண்ட கைத்தொழிலுக்குத் தேவையான களிமண் அனேகமான வன்னி மாவட்டம் நெடுங்கேணி எனும் பிரதேசத்தில் இருந்து எடுத்து வரப்படுகிறது. ஒரு மண்பாண்டம் செய்து முழுமை அடைய குறைந்தது ஒரு வார காலமேனும் தேவைப்படும். இதன் முதற்கட்டமாக களிமண்ணை நன்றாக சூரிய ஒளியில் காயவைத்து பின்பு அதனைப் பதப்படுத்தும் செயல்முறை நடைபெறும். தற்போது மண்ணைப் பதப்படுத்த இயந்திரம் ஒன்று பயன்படுத்தப்படுகிறது. இதற்குமுன் கால்களைப் பயன்படுத்தியே களிமண்ணைப் பதப்படுத்தும் செயல்முறை நடைபெற்றது. வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் பயனாக மட்பாண்ட கைத்தொழில் இன்றும் வினைதிறனுடன் வளர்ந்துவருகிறது. இயந்திரத்தின் உதவியுடன் நான்கு அல்லது ஐந்து நாள்களுக்குத் தேவையான மண்ணை ஒரே தடவையில் பதப்படுத்தமுடிகிறது. அவ்வாறு பதப்படுத்திய மண் அதன் தன்மை கெட்டுவிடாமல் இருக்க பொலித்தீனின் உதவியுடன் பாதுகாக்கப்படுகிறது. பின்பு ஒரு நாளைக்குத் தேவையான மண்ணை எடுத்து தேவையான மட்பாண்டங்கள் செய்யப்படுகின்றன. பின்னர் மட்பாண்டங்கள் வெயிலில் காயவைக்கப்படும். இவ்வாறு மூன்று அல்லது நான்கு நாள்கள் செய்து வைக்கப்பட்ட மட்பாண்டங்கள் போரணையில் இட்டுச் சூடாக்கப்படும். போரணை என்பது பெரிய அளவிலான அடுப்பு ஆகும். மட்பாண்டங்களை சூடாக்க இது பயன்படுத்தப்படும். போரணையில் இட்ட மட்பாண்டங்கள் அந்த வெப்பத்தில் குறைந்தது ஒரு நாளாவது வெப்பப்படுத்தப்படும். பின்பு அதனை வெளியில் எடுத்து அந்த மட்பாண்டத்தை செப்பனிடும் வேலை நடைபெறும். செப்பனிட்டு சரிபார்க்கப்பட்ட மட்பாண்டங்கள் சந்தைக்கு அனுப்ப தயார்ப்படுத்தப்படும். ஒவ்வொரு பருவகாலத்திற்கு ஏற்ற வகையில் தேவையான விதவிதமான மட்பாண்டங்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

நவீனகாலத்தில் அலுமினியப் பாத்திரங்களின் பாவனை அதிகரித்த போதிலும் மட்பாண்டப் பாவனை வீழ்ச்சிஅடையவில்லை. அலுமினியத்திற்கு மாற்றீடாக மண்ணால் செய்யப்பட்ட பாத்திரங்கள் பாவிப்பதால் உடலில் ஆரோக்கியம் அதிகரிக்கிறது. அத்துடன் பெருமளவான நோய்களிலிருந்து பாதுகாக்கப்படுவோம். களிமண்ணின் குணப்படுத்தும் பண்புகளை மனிதகுலம் பலநூற்றாண்டுகளாக அறிந்திருக்கிறது. பண்டைய காலங்களில், மட்பாண்டங்கள் உணவுகள் தயாரிக்கவும், மருத்துவ மற்றும் ஒப்பனை நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டன. அத்துடன், மட்பாண்டங்கள், செரிமான பிரச்சினைகளை நீக்குகின்றன. உடலில் இருந்து நச்சுகளை நீக்குகின்றன. வாத நோய், தசைகள் மற்றும் மூட்டுகளில் வலி, பற்களை பலப்படுத்துகின்றன, ஈறுகளின் இரத்தப் போக்கு மற்றும் வீக்கத்தை நீக்குகின்றன, வீங்கி பருத்து வலிக்கிற நரம்புகள் மற்றும் செல்லுலைட்டை எதிர்த்துப் போராடுகின்றன, தோல் நோய்களுக்கு சிகிச்சையளிக்கின்றன, தோல், முடி மற்றும் நகங்களின் நிலையை மேம்படுத்துகின்றன.



மட்பாண்டங்களின் மருத்துவக் குணங்கள் மேலைத்தேய நாடுகளில் அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளதால் அந்த மக்கள் பெருமளவு மட்பாண்டங்களை விரும்பிப் பாவிக்கின்றனர். ஆனால் இலங்கையில் உள்ள மக்கள் ஒப்பீட்டளவில் மட்பாண்டங்களின் பயன்களையும் நன்மைகளையும் அறியாதிருப்பது துரதிஷ்டமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பருத்தித்துறை துறைமுகம்

## மக்களின் குரலென்ன?

மரியசெல்வம் ஜோய் எந்தனி
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மூலை நகரம் என்ற புகழுடன் பிராந்திய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் காணப்பட்ட பருத்தித்துறையின் வரலாறு என்பது. அங்குள்ள துறைமுகத்தை, அதன் வளர்ச்சியை, தேய்வை, அது முகம்கொடுத்த யுத்தத்தையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும் ஒன்றாகும். இன்னும் சொல்லப்போனால், துறைமுகத்தை நீக்கிவிட்டு பருத்தித்துறையின் வரலாற்றைப் பேசிவிடமுடியாது. ஏனெனில், பருத்தித்துறை துறைமுகத்தின் வரலாறு அங்கிருக்கும் மக்களுடைய வாழ்வியலின் ஒவ்வொரு கீற்றுக்களிலும் தன்னை இணைத்துக்கொண்டு பருத்தித்துறைக்கென்று தனித்துவமான பண்பாட்டையும் உருவாக்கியிருந்தது.

பருத்தித்துறை துறைமுகம் வங்களா விரிகுடாவும் பாக்கு நீரிணையும் சந்திக்கும் இடத்தில் அமைந்திருக்கிறது. எனவே கிழக்காக தென்கிழக்காசிய நாடுகளுடனும் ஏணைய நாடுகளுடனும் கப்பல் பயணங்களில் ஈடுபடுவது மிகவும் வசதியாக இருந்தது. கடந்த யுத்தகாலத்தில் பருத்தித்துறை துறைமுகம் இலங்கையில் பாதுகாப்புக்கான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் இருந்து வந்துள்ளது. அத்துடன் குடாநாட்டுக்கான பொருள்கள் கப்பலினூடாக விநியோகிக்கப்பட்ட துறைமுகமாகவும் அண்மைக் காலத்தில் குறிப்பாகப் போர்க்காலத்தில் திகழ்ந்தது.

பருத்தித்துறை துறைமுகம் ஒல்லாந்தர் காலத்திலேயே புகழ்பூத்த துறைமுகமாக இருந்ததை யாவரும் அறிவர். இன்று அது வெறும் மீன்பிடித்துறைமுகமாகக் காணப்படுகின்றது. 1990 காலப்பகுதியில் பருத்தித்துறை துறைமுகம் மிக அதிகளவில் பேசப்பட்டது. பத்திரிகைகளில் பருத்தித்துறைத் துறைமுகத்தில் எந்தக் கப்பல் தரித்துள்ளது என்பதுகூட அன்றன்றைய தலைப்புச் செய்தியாக அமைந்த காலங்கள் என்றும் மறக்கப்படமுடியாதவை.

### மீள்கட்டமைப்பும் எதிர்ப்பும்

பருத்தித்துறை துறைமுகத்தினை மீள்கட்டியமைப்பதற்காக 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் அடிக்கல் நடப்பட்டது. ஆனால், துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு எதிராக பலநூறு மக்கள் இணைந்து போராட்டங்களில் ஈடுபட்டனர். துறைமுகமொன்றை அபிவிருத்தி செய்யும்போது ஏன் மக்கள் அதை எதிர்க்கவேண்டும்? எதற்காகப் போராட்டங்களை நடத்தவேண்டும்? இதற்கான காரணமும் மக்களாலேயே வழங்கப்பட்டது.

"உண்மையில் துறைமுகம் மீள்கட்டியமைக்கப்பட்டால் எங்களது மீன்பிடித் தொழில் பாதிப்படையும். ஏனெனில், சிறு படகுகளை வைத்து தொழில் செய்பவர்களே இங்கு அதிகம் காணப்படுகின்றனர். பெரிய துறைமுகம் ஒன்று வந்தால் எங்களது படகுகள் கடலுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்படும்.

இப்போது எமக்கிருக்கும் மீன்பிடி வாய்ப்புகளை வரவிருக்கும் பெரிய துறைமுகம் பறித்தெடுக்கும். பெரிய கப்பல்களை வைத்திருப்பவர்களுக்கு இது சாதகமாக இருந்தாலும் பெருவாரியான சிறுதொழிலாளர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படுவார்கள்" என்பது மீனவ சங்கத்தலைவர் ம.அஜித்குமாரின் கருத்தாக அமைந்தது. "எங்களுக்கான வருமானம் வரும் வழியாக காணப்படுவது இந்த மீன்பிடித்தொழில்தான். காலையில் 6 மணி முதல் 8 மணி வரை 2 மணித்தியாலங்கள் வலையில் உள்ள மீன்களை எடுப்பதற்காக (மீன் தெரிவுக்காக) ஒரு தொகை பணம் வழங்கப்படும். அதுவே எங்களது வாழ்க்கையைக் கொண்டுசெல்ல பெரிய துணையாக அமைகின்றது. இப்போது பெரிய துறைமுகம் வந்தால் கடுமையான பொருளாதார நெருக்கடிக்குத் தள்ளப்படுவோம் என்பது உறுதி" என்று சிறுபடகுகளைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களிடம் பகுதிநேரத் தொழில்வாய்ப்பைப் பெற்றுள்ள பெண்ணொருவர் தெரிவித்தார். இன்று அடிக்கல் நாட்டப்பட்டதோடு காணப்படும் அந்தத் துறைமுகம் அரசாங்கம் மாற்றப்பட்டதால் நடைமுறைக்கு வராமல் இருந்தாலும் எதிர்காலத்தில் மீண்டும் பேசுபொருளாகலாம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் இருக்கவே செய்கின்றது.

துறைமுகத்தினை வேண்டாம் என மக்கள் சொல்வதற்கு இன்னுமொரு முக்கியமான காரணமாக அமைவது பருத்தித்துறையின் அடையாளமாகக் காணப்படும் இரு பாடசாலைகளாகும். இரு பாடசாலைகள் துறைமுகத்தின் அருகாமையில் இருப்பதால் துறைமுகத்தை மீளக் கட்டியமைக்கப்படும் திட்டத்தில் துறைமுகத்தோடு பெரிய பூங்காக்கள், வர்த்தக நிலையங்கள், என அனைத்தும் வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பாடசாலைப் பிள்ளைகளுக்கு அது கலாசாரம்சார் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதும் துறைமுகத்தை எதிர்ப்பதற்கான பிரதான காரணமாகவே அமைந்துள்ளது.









### ஆதரவுக் குரல்

இதேவேளை, "பருத்தித்துறையில் பெரியதொரு துறைமுகம் அமைக்கப்பட்டால் அது நல்ல விடயமே. நாங்கள் ஒவ்வொரு நாளும் மயிலிட்டிக்குச் சென்றுவர வேண்டிய நிலையை இது மாற்றும்" என்று ஒப்பீட்டளவில் பெரிய கப்பல்களை வைத்திருக்கும் மீனவர்களில் ஒருவரான அன்ரன் என்பவர் தெரிவித்தார்.

ஆக, பருத்தித்துறையில் துறைமுகமொன்று தேவையில்லை என்ற கோரிக்கையும், இதேவேளை - துறைமுகம் தேவையே என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அபிவிருத்திகள் என்பன அவசியமானவைதான். ஆனால், அந்த அபிவிருத்திகள் மக்களின் பொருளாதார ஈட்டுகையைப் பின்னடைவுக்குள் தள்ளுவதாகவோ, மக்களின் வாழ்வைப் புரட்டிப் போடுபவையாகவோ அமையக்கூடாது.

துறைமுகம் பெரியளவில் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்தான் என்றால், துறைமுகக் கட்டுமானத்துக்கு எதிர்ப்பை வெளியிடும் மக்களின் குரல்களை அவ்வளவு இலகுவில் புறமொதுக்கிவிடமுடியாது. அவர்களையும் இணைத்து கலந்துரையாடல்கள் மற்றும் திட்டங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் அடுத்தகட்ட நடவடிக்கைகளே ஆரோக்கியமானவையாகவும் பயன்மிக்கவையாகவும் அமையும்.

## மனிதனின் உள்ளமே இறையாட்சியின் இல்லம்



தவக்கால சிந்தனை

இறைமகன் கிறிஸ்துவின் மண்ணக வருகையே இவ்வுலகில் இறையரசுக் கனவை மலரச்செய்தது எனலாம். இறையாட்சி என்பது கடவுளுடைய அன்பின் ஆட்சியாகும். இவ்வாட்சியினை உலகில் நிலைநாட்டுவதனையே தன் இலட்சியமாகக் கொண்டிருந்த இயேசு, அதனை தன் வாழ்வாலும் போதனைகளாலும் பறைசாற்றினார். மனிதனை அழிவுப்பாதைக்குள் இட்டுச்செல்லும் தீமைகளை வென்று, தீயசக்திகளுக்கு எதிராகத் தனது செயற்பாடுகளை அமைத்து, அன்புச்செயல்கள் மூலம் மனிதனின் நலத்தில், அவனது வாழ்வில், உறவின் மகிழ்வில், அன்றாட செயற்பாடுகளில் இறையரசு சார்ந்த எண்ணங்கள் உருவாக வழியமைத்தார். இறையரசை நிறுவுவதும் அதை நெறிப்படுத்துவதும் இறைவனது வேலையாக இருந்தாலும், மனிதர்களே அதைத் தொடரவேண்டும் என்பது இயேசுவின் திருவுளமாகும். ஏனெனில் மனிதனின் உள்ளமே இறையாட்சிக்குரிய இடம். அவனது வாழ்வே இறையாட்சி. இறையாட்சியின் மைந்தர்களின் வாழ்வை மாதிரியாகக் காட்டிய இறைமகன் அந்த வாழ்க்கை முறையை தன் போதனைகளால் தெளிவுபடுத்தியுள்ளார். அவருடைய போதனையின் சாரமும் வாழ்வின் வார்ப்புமாக விளங்குவதே மலைப்பொழிவு என்றால் மிகையாகாது. இயேசுவின் மலைப்பொழிவு தரும் விழுமியங்களை கடைப்பிடித்து இவ்வுலகில் இறையாட்சியின் இல்லமாக திகழ்வோம்.

**அருட்தந்தை றமேஸ் அ.ம.தி**

## யாழும் ஞாயிறும்

வாரந்த நாட்களின்
இறுதியில்
ஓய்ந்து ஒப்பித்துக்
கொண்டிருக்கும்
பாதைகளும் போதைகளும்.
ஆரியகுளம் சத்தமிடும்
குருவிகளும் கீச்சலிடும்
குளிரும் காய்ச்சலிடும்
பேந்து வருவீனம் என்று
சொல்வீனம்,
பேருந்தும் வரமாட்டினம்,
பம்பலின் கும்பலும்
கதைக்கவும் வதைக்கவும்
சவம் வழிமறிக்க...
பேசுவினம் சவமென்று
கொக்கரிக்க...
பஞ்சிப்பட்டிருக்கும் போது
குறலி வித்தைகளும்
இடம்பெறுவதற்கும்
வழிவகுக்கும்.
சமிக்ஞை விளக்குகள்
எரிந்தும் எரியாமலும்,
மோட்டார் சைக்கிள்களின்
சாலையோர சாகசம்
விரைந்தும் சிதைந்தும்
பண்ணை விளக்கேற்றி
தன்னை மெருகூட்டி
கூட்டத்தைக் கூட்டி
வருமானத்தை ஈட்டியது
இன்னும் எழுதிக் கொண்டு
போகலாம்
விசர் அடிக்கும்
கல்சியம் நீக்கப்பட்டு
கலங்கிய நீரால் தாக்கப்பட்டு
மெய்பொருள்
காண்பதறிவால்
கக்கப்பட்டது.

மபாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக்கு அங்கீகாரம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் தேசிய ரீதியாக நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில், பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த பா.பாலஜினிஇரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

அதற்கான காசோலை பிரதேசசெயலர் த.ஜெயசீலன், உதவிப் பிரதேச செயலர் திருமதி ச.குணஜா ஆகியோரால் பிரதேச செயலகத்தில் வைத்து அண்மையில் கையளிக்கப்பட்டது.

இளைஞர் சேவைகள்மன்ற உத்தியோகத்தரால் ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-9)

# யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருளாதார மீட்சிக்கு வழி

மருத்துவர் சி.யமுனாநந்தா

இலங்கை பொருளாதாரத் தளம்பல் நிலையில் இருந்து மீண்டு வருகின்றது. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் மக்கள் பொருளாதாரத்தை மேம்படுத்த சில முற்போக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல்வேண்டும்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் நிலத்தின் பெறுமதி மிகவும் தாக்கம் செலுத்துகின்றது. ஆனால் துரதிஷ்டவசமாக பெருமளவு நிலங்களை இலங்கைப் பாதுகாப்புப்படையினர் கையகப்படுத்தி வைத்துள்ளனர். குறிப்பாக தெல்லிப்பழையில் இருந்து மயிலிட்டிக்குச் செல்லும்போது பெருமளவான விவசாய நிலங்கள் பொதுமக்களின் பாவனையில் இருந்து பாதுகாப்புக் காரணங்களுக்காக அபகரிக்கப்பட்டுள்ளன.


தற்கால கணினி யுகத்தில் பாதுகாப்புச் செயற்பாடுகளை கணினிமயப்படுத்தினால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள 90 வீதமான நிலங்களை பொதுமக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்குக் கையகப்படுத்தலாம். இதனால் படைத்துறைக்கான ஆளணிகளையும் செலவுகளையும் பெருமளவு குறைக்கலாம்.

அடுத்து யாழ்ப்பாணம் பலாலி விமான சேவையினையும், காங்கேசன்துறை கப்பல் சேவையினையும் இந்தியாவின் தனியார் முதலீட்டாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் கொடுப்பதனால் பெருமளவு வருமானத்தினை எவ்வித செலவுகளும் இன்றிப் பெற்றுக்கொள்ளலாம். பொருளாதார மீட்சிக்கு இத்தகைய வழிகளை நாம் அரசியல் உணர்வுகளுக்கு அப்பால் செயற்படுத்துதல் அவசியம்.

# புத்தக அரங்கவிழா!




தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் தர்மபுரம் மத்திய கல்லூரியில், புத்தக அரங்க விழா அண்மையில் இடம்பெற்றது. (ப)






அராலியூர் வி.செல்வரத்தினம்

# திருக்கயிலாயம்



உலகில் ஆகச்சிறந்த திருத்தலங்களாக, திருக்கயிலாயம், காசி, மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம், திருக்காளத்தி, சிதம்பரம், திருவண்ணாமலை, திருவாரூர், திருவிடைமருதூர் என்பன காணப்படுகின்றன. இவற்றில், திருக்கயிலாயத்தை தவிர்த்து ஏனைய தலங்களுக்கு மிக இலகுவாகச் சென்று தரிசனம் செய்யலாம். ஆனால், திருக்கயிலாயம் செல்வது சற்றுக்கடினம். எனவே திருக்கயிலாயம் எங்கே இருக்கிறது? அத்தலத்திற்கு எப்படிச் செல்லலாம்? அதற்கு வேண்டிய வழிவகை என்ன? என்பது பற்றிப் பேசுகின்றது இந்தக் கட்டுரை. ஓம் எனும் ஓங்காரநாதன் எதிரொலிக்கும் இடம் சிவபெருமான் குடிகொண்டுள்ள கயிலாயமலையாகும். இந்தக் கயிலாயமலை இமயமலையில்தான் இருக்கிறது.



## ஓர் ஆன்மீகப் பயணம்!

இராமாயணத்தில் இமயமலையைப்போல் சிறந்த மலை உலகில் வேறு ஏதுமில்லை என்று கூறப்படுகிறது. ஏனென்றால் கயிலாயமலையும் மானசரோவர் ஏரியும் அந்த மலையில் ஒருசேர இருக்கின்றன.

### திருக்கயிலாயத்தின் சிறப்பு

முதலில் சிவபெருமானின் இருப்பிடமான கயிலாயமலையைப் பற்றிப் பார்ப்போம். கயிலாய மலைச் சிகரத்தின் உயரம் 22 ஆயிரத்து 88 அடி (கடல் மட்டத்திலிருந்து) ஆகும். இந்தச் சிகரத்தை வருடம் முழுவதும் வெண்பனி மூடியிருக்கும். இந்த ஒரு சிகரம் மட்டுமே கம்பீரமாக வெண்பனிப் போர்வையால் மூடப்பட்டு ஏறத்தாழ இலிங்க வடிவில் அமைதியாகக் காட்சியளிக்கிறது இந்த மலை நீண்ட தொடர் உடையது. அதனைச் சுற்றிலும் மலைத்தொடர்கள். இதன் உச்சிக்கு யாரும் செல்லமுடியாது. மேருமலை எனப்படும் இந்தக் கயிலாயமலைதான் பூமியின் நாயகத்தனமாக உள்ளது.


இந்தக் கயிலாய மலையிலிருந்து நான்கு திசைகளில் நதிகள் பிரிந்து செல்கின்றன. அதாவது பிரமபுத்திரா நதி கிழக்குத் திசையிலும், சிந்து நதி வடக்குத் திசையிலும், கர்னாலி நதி தென்திசையிலும், சட்லெஜ் நதி மேற்குத் திசையிலும் பயணிக்கின்றன.

ஒரே மலையில் உற்பத்தியாகும் நதிகள் நான்கு வெவ்வேறு திசைகளை நோக்கி பாய்வதென்பது உலகில் வேறு எங்கும் கிடையாது. இந்த ஓர் இடத்தில் தான் இந்த அதிசயம் நிகழ்கின்றது. இது மிகவும் அபூர்வமானது.

கயிலாயமலை இமயத்தின் வட சரிவில் மேற்குத் திபெத் நாட்டின் எல்லையில் இயற்கைக் கோயில்போல் பனிக்கட்டிகளை மேனி முழுவதும் போர்த்திக்கொண்டு மூலஸ்தான மூர்த்தியாக வெண்மையான பிரகாசத்துடன் விளங்கிக்கொண்டிருக்கிறது. கயிலாய மலை எப்போதும் இலிங்க வடிவில் தோன்றிக்கொண்டே இருக்கும். இமயமலையின் அடியிலிருந்து 5000 அடிவரை முதற்பாகம், அடுத்து 9000 அடிவரை இரண்டாம் பாகம் உள்ளது. அதற்கு மேல் மூன்றாம் பாகம். இந்த எல்லையற்ற இமயத்தில்தான் திருக்கயிலாயம் இருக்கிறது.

திருக்கயிலாயத்திற்குச் செல்வதற்கு பல பாதைகள் உள்ளன. எனினும் நேபாளத்தின் ஊடாகப் பயணிக்கும் பாதைதான் இலகுவானது. அனேமானவர்கள் இந்தப் பாதையைத்தான் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றார்கள்.

(பயணம் தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாரணைக்குத்...

"வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தி, கைது விவகாரத்தில் ஏதேனும் தவறு நடந்திருந்தால் அது பற்றியும் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கு நாம் தயார்" - என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிரணிகளில் உள்ள தமிழ் எம்.பி.க்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது கருத்து வெளியிடுகையிலேயே நீதி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"8 பேர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவிக்கின்றார். இது நீதிமன்ற நடவடிக்கையாகும். எனினும், கைது விடயத்தில் ஏதேனும் தவறு நடந்திருந்தால் அது தொடர்பில் பக்கச் சார்பற்ற சுயாதீன விசாரணையை முன்னெடுத்து, அந்தக் காரணம் தொடர்பில் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தமுடியும். அப்போது நீதிமன்றம் நீதியை நிலைநாட்டும்.

சட்டத்தின் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும் என ஒருபுறம் வலியுறுத்துகின்றனர். மறுபுறத்தில் கைதானவர்களை விடுவிக்குமாறு எம்மிடம் கோருகின்றனர். நாம் தீர்ப்பை வழங்கினால் சட்டத்தின் ஆட்சி எவ்வாறு பாதுகாக்கப்படும்? தீர்ப்பை நீதிபதிகள்தான் வழங்கவேண்டும்.

கைது விடயத்தில் தவறு நடந்திருந்தால் அது பற்றி விசாரித்து, சகல தகவல்களையும் நீதிமன்றுக்கு வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தை வழங்குகின்றேன்" - என்றார். (அ-44)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



நெடியகாடு வல்வெட்டித்துறையை
பிறப்பிடமாகவும், லண்டனில் வசித்து வந்தவருமான

### அமரர் ஜெயலக்ஷ்மி யோகராஜா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளைமறுதினம் (22.03.2024) வெள்ளிக்கிழமை ஊரணி வல்வெட்டித்துறை, புனித தீர்த்த கடற்கரை அருகிலுள்ள அந்தியேட்டி மடத்தில், காலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் நெடியக்காட்டு வீட்டில், வீட்டுக்கிருத்தியம் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும். அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனையில் கலந்துகொண்டு அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

**விஸ்வநாதபிள்ளை**
(சகோதரர்) LK +94 774518015
**பார்த்தீபன்**
(பாபு - மகன்) LK +94 77 513 4270
UK +44 7656 305066
**காண்டீபன்** (காண்டீ - மகன்) AU +61 421370204
**பகீரதன்** (பகீ -மகன்) UK +44 7960947221

**மகன்மார் - பார்த்தீபன் (பாபு), காண்டீபன், பகீரதன்,**
**சகோதரர்கள் - விஸ்வநாதபிள்ளை, தங்கராஜா, ராமச்சந்திரன்.**

(cs.54457) (N-1)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் சண்முகராசா

**(ஓய்வு நிலை ஊழியர் தொலைபேசி இலாகா)**



சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும், பாலாவோடை, உடுவில் தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சண்முகராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (18.03.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், வினோதினி (ஆசிரியை, யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), விஜிந்தினி (ஆசிரியை, யா/ தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), விமர்ஜினி, கஜேந்திரன் (முகாமைத்துவ உதவியாளர், கோப்பாய் பிரதேச செயலகம்), விபாஜினி (கனடா), விதுஜா (ஆசிரியை, யா/ சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லிங்கசீலன் (ஆசிரியர், யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி), ஸ்ரீலக்சுமிகாந்தன் (கமம்), சிவசிந்துஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர், அரச கால்நடை வைத்திய அலுவலகம், கிளிநொச்சி), அம்பிகைகுமார் (கனடா), ஜதுர்ஷன் (ஆசிரியர், யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம் மற்றும் நாகேஸ்வரி, செல்வராசா, யோகேஸ்வரி, பரமேஸ்வரி, விக்கினேஸ்வரி, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவரான தங்கம்மா, விஜயராஜேஸ்வரி, நாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், தர்மலிங்கம், பாலசுப்பிரமணியம் மற்றும் கணேசமூர்த்தி, அருந்தவமலர் ஆகியோரின் மைத்துனரும், திபிஜா, கஜமிதா, சஜீசன், ஸ்ரீவிமர்ராஜ், ஸ்ரீபாக்கியகௌரி, ஸ்ரீவாசன், ஸ்ரீமதீசன், தர்சாந், ராகவ், சந்தோஸ், ரதானா, கவீரன், நிஸ்ரிதா, நிகானா, நயனிகா, நயோனிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**பாலாவோடை,**
**உடுவில் தெற்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 28[illegible] S[illegible])

## மரண அறிவித்தல்

மலர்வு
16
02
1933



உதிர்வு
19
03
2024

### அப்பாப்பிள்ளை தேவராசன்

கந்தரோடையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை தேவராசன் அவர்கள் நேற்று (19.03.2024) செவ்வாய்க்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை - இரத்தினவல்லி தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற நாகரத்தினம் - சின்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற புனிதவதியின் கணவரும், முரளீதரன் (பிரான்ஸ்), பகீரதன் (லண்டன்), மோகனசுந்தரன் (லண்டன்), தயா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்றவர்களான பகவதியம்மா, சிவபாக்கியம்மா, சோதிமதியம்மா, கெங்காதரன், யோகரத்தினம்மா, விவேகானந்தன், பொற்கொடியம்மா ஆகியோரின் சகோதரனும் கலாஜோதி(பிரான்ஸ்), ஹர்ஷினி(லண்டன்), கல்யாணி(லண்டன்), DR.டனராஜ் (சத்திர சிகிச்சை நிபுணர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், DR.நிலக்ஷினி, மயூரன், நிஷிஷன், நிஷாஷினி, சுகந், ஷஷிலஜன், ஷிலஷிகா, வர்ணன், கௌதம், மகதி, ஹரிஷன், கிரிஷா, ரோஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் மயிலா, அனித் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 20.03.2024 புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


**"தயா இல்லம்",**
**கந்தரோடை,**
**சுன்னாகம்.**

**தொடர்பு :-**
**தயா- 0766523070, 0212241786**
**பகீரதன் - +447414101033**
**முரளீதரன் - +33663797447**
**மோகனசுந்தரன் -+447957285530**

(CS 283303) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
16
04
1963



மறைவு
18
03
2024

### முருகேசு ஜெயநாதன் J.P

**(பிறப்பு இறப்பு பதிவாளர் வட்டுக்கோட்டை)**

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு ஜெயநாதன் நேற்றுமுன்தினம் 18.03.2024 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-மகேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சபாநாதன் (சட்டத்தரணி), சந்திரவதனி மற்றும் மதிவதனி, மலர்வதனி, மணிவதனி, திலகவதனி ஆகியோரின் பாசத்துக்குரிய சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரிரியைகள் இன்று (20.03.2024) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கொத்துத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**[illegible] வைரவர் கோவிலடி**
**வட்டுக்கோட்டை**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 225 1509**
**077 725 9173**

(CR 41945) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கைதடி வடக்கு கயிற்றசிட்டி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான

# புனராவர்த்தன சாஷ்ட பந்தன நவகுண்டபக்ஷ

# மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்-2024



**மஹா கும்பாபிஷேகம்**
**காலம் - 20.03.2024**
**நேரம் - காலை 9.31 - 11.30 வரை**

### ஆசியுரை

யாழ்ப்பாணம் கைதடி வடக்கு கயிற்றசிட்டி திருவருள் மிகு கந்தசாமி கோவில் தேவஸ்தான ஒன்பதாவது மஹா கும்பாபிக் ஷேகம் 20.03.2024 காலை 9.31 மணி முதல் 11.30 மணி வரை நடை பெறவிருக்கிறது. மேற்படி ஆலய நித்யபூஜா கைங் கர்யங்களையும் நைமித்திக கிரியை களையும் சிவஸ்ரீ. கணேச குருக்களும் அவரு டைய சகோதரரும் நடாத்திக் கொண்டு வருவது இந்த ஆலயத்தின் சிறப்பம்சமா கும். மேலும் இக் கும்பாபிக் ஷேகத்தை ஒட்டி மலர் வெளியீடு எல்லாம் சிறப்புற நடைபெற கயிற்றசிட்டி வாழ் கந்தப்பெரு மானை உள்ளன்போடு பிரார்த் திக்கிறேன்.

**சிவஸ்ரீ.மகாதேவக்குருக்கள்**

### ஆலய பிரதம குருவின் ஆசியுரை

மூர்த்தி. தலம். தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்று விளங்குகின்ற கைதடி வடக்கு. கையிற்றசிட்டி என்னும் புண்ணிய ஷேத்திரத்தில் கோவில் கொண்டு அருள் பாலிக்கின்ற முருகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் இன்று மஹாகும்பாபி ஷேகம் நடைபெறுகின்றது. இக்கும்பாபிஷேகத்தின் மூலம் தெய்வ சாந்நித்தியம். மக்கள் செல்வச் சிறப்பு. ஊர்சிறப்பு, உயர் கல்வி சிறப்பு என்பன மேலோங்கி தழைக்க வழி பிறப்பிக்கின்றது.

கோவில் கட்டட அமைப்பு. வர்ண வேலைப்பாடுகள். அழ காய் உயர்ந்தோங்கும் ராஜ கோபுரங்கள். சிற்ப வேலைப் பாடுகள் என்பவற்றால் மிகவும் சிறப்பாக விளங்குகின்றது. நான் எங்கு சென்று திருப்பணிக்கான நிதி உதவியை கேட்கும்போது முருகன் அடியார்கள் உள்நாட்டிலும். தொலைபேசி மூலமாக வெளிநாட்டிலும் இருக்கிறவர்கள் தாராள மனதுடன் தந்து இவ் அளப்பெரும் கைங்கரியத்தை சிறப்புற நிகழ பேருதவி புரிந்துள்ளார்கள். மேலும் அன்பர் கள் சரீர உதவிகளும் புரிந்துள்ளார்கள். அனைத்து முருகன் அடியார்களும் கலையாத கல்வியும். கழுபிணியிலாத உடலும் போன்ற பதினாறு செல்வங்களும் பெற்று சீரான வாழ்வு வாழ கையிற்றசிட்டி முருகனின் கழல் பணிந்து நல்லாசி கூறுகின்றேன்.

**ஆலய பிரதமகுரு**
**பிரம்மஸ்ரீ. முத்துக்குமார கணேசகுருக்கள்.**

### பிரதிஸ்டா பிரதமகுரு அவர்களின் ஆசியுரை

ஆலயங்கள் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது சான்றோர் வாக்கு. நித்திய நைமித்திய வழிபாடுகள் ஆலயங்களில் நடைபெறுவது மக்களின் ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிகாட்டுவ தாய் இருக்கிறது. ஆலயங்கள் புதுப்பிக்கப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை மஹா கும்பாபிஷேகம் என்னும் பெருஞ் சாந்தி விழா நிகழ்கிறது. "பெரும் சாந்தி காணாமல் போனாயே பூம்பாவாய்" என திருஞான சம்பந்தர் தனது தேவார திருப்பதிகத்தில் பாடுவதன் மூலம் கும்பாபிஷேகத்தின் சிறப்பை எம்மால் உணர முடிகிறது.

கைதடி வடக்கு கையிற்றசிட்டி எனும் புண்ணிய ஷேத்திரத்தில் கோவில் கொண்டு எழுந்தருளி தன்னை நாடிவரும் அடியவர் களின் துயர்துடைத்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ வைக்கின்ற நம் சொந்தப் பெருமானாம் கந்தப்பெருமானின் ஆலயம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு அழகிய கலை நயத்துடன் பல வர்ண வேலைப்பாட்டுடன் அமையப் பெற்று இந்நாளில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இவ் வாலயம் சிறப்புற அமைய பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உள்நாட்டு. வெளிநாட்டு அடியவர்கள் அனைவருக்கும் பெருஞ்சாந்தி விழாவின் பயன்கிடைத்து மண்ணில் நல்லவண்ணம் வாழ கந்தன் கழல்கள் பணிந்து நல்லாசிகளை கூறுகின்றேன்.

**பிரதிஷ்டா பிரதமகுரு, வேதசிவாகம ஞானபானு,**
**பிரம்மஸ்ரீ கே.மு.சோமசுந்தரக்குருக்கள்.**

### பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

தமிழர்களின் பண்பாட்டு பேணுகையை இறுக்கமாக பேணிவரும் மாவட்டம் யாழ்ப்பாணம் ஆகும். இங்கு ஒவ்வொரு வகையாக பண்பாட்டுக் கூறுகள் பிரதேச வழக்காறுகளாக காணப்படுகின்றன. யாழ் மாவட்டத்தின் பிரதான கூறுகளாக விளங்குபவை வலிகாமம். தென்மராட்சி. வடமராட்சி. தீவகம் ஆகிய பிரதேசங்கள் ஆகும். இந்த பிரதேசங்கள் ஒவ்வொன்றும் தத்தமக்குரிய தனித்துவமான பண்பாடு மற்றும் சமய வழிபாடுகளைக் கொண்டிருக்கின்றன. இவற்றில் தென்மராட்சி பிரதேசம் என்பது. தொன்மையான வரலாறுகள் பலவற்றைக் கொண்ட பிரதேசம் ஆகும். தென்மறவர்கள் வாழ்ந்த பிரதேசம் என்றும். சாவகர்கள் வாழ்ந்த பிரதேசம் என்றும் வரலாற்று குறிப்புக்கள் கொண்டிருக்கிறது. சோழர்களோடு தொடர்புபட்ட பிரதேசமாகவும் விளங்கும் தென்மராட்சியின் ஒவ்வொரு பகுதிகளும் தனித்துவமானவை. யாழ்ப்பாணத்தில் இருந்து நாவற்குழி தென்மராட்சியின் முதல் தொடக்க நிலப்பரப்பாகவும் அடுத்து கைதடி எனும் பிரதேசம் இரண்டாவது நிலப்பரப்பாகவும் காணப்படுகின்றது.

கைதடி பிரதேசம் இயற்கை விவசாயம் நிறைந்த பிரதேசம் ஆகும். இப்பிரதேசத்தின் பண்பாட்டுச் சூழல் என்பது பெருமள வுக்கு ஆன்மீகம் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. மக்கள் தமது வாழ்வியல் முன்னேற்றத்திற்கு கடவுளை துணைக் கொள்ளும் வழக்கம் இப்பிரதேசத்தவர்களிடம் காணப்படும் ஒரு பண்பாகும். இந்த பண்பாட்டின் வெளிப்பாடாவும் பக்தியின் வெளிப்பாடாகவும் தான் இப்பிரதேசத்தின் பல பகுதிகளிலும் பல ஆலயங்கள் காணப்படுகின்றன. ஆலய வழிபாட்டினை இன்றுவரை புனிதமாக பேணிவருகின்றார்கள்.

இந்தவகையில் கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தசாமி தேவஸ் தானம் தனது கும்பாபிஷேகத்தினை காண இருப்பது எமக் கெல்லாம் பெருமை தரும் விடயமாகும். பெருஞ்சாந்தி விழா என்று சம்பந்தப் பெருமானால் சிறப்பிக்கப்பட்ட கும்பாபிஷேகங் கள் பலவற்றை காணும் பிரதேசம் வளமான வாழ்கைகயை வாழும் பிரதேசம் ஆகும். அந்த வகையில்தான் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேக விழாவுக்கு பெரும் மகத்துவம் இருக்கின்றது. மூலஸ்தானத்தில் இருக்கும் விக்கிரகத்திற்கு தெய்வ சக்தியை அதிகரிக்கச் செய்யும் கிரியை முறையே கும்பாபிஷேகம் ஆகும். ஒருவர் தனது வாழ்க்கையில் எத்தனை கும்பாபிஷேகத்தினை காணு கின்றாரோ அந்தளவுக்கு அவரது வாழ்வு ஒளிகொள்ளும் என்பது ஆன்றோர் வாக்கு. எனவே எமது சூழலில் உள்ள கந்தசாமி தேவஸ்தானம் கும்பாபிஷேகம் காண இருப்பது எமக்கெல்லாம் புதிய சக்தி கிடைக்க இருப்பது போலுள்ளது. இந்த புனிதமான நாளில் வெளியிடப்படுகின்ற கும்பாபிஷேகமலர் இப்பிரதேசத்தின் சமய வழிபாட்டினையும் ஆலயத்தின் வரலாற்றினையும் பேணும் ஆவணமாக வெளியிப்படுகின்றது. காலங்கடந்தும் இந்த கும்பாபிஷேகம் பற்றி நினைவு கூருவதற்கு இந்த மலர் சிறந்த சான்றாக அமையும். எனவே இந்தப் பணியில் ஈடுபட்டிக் கும் அனைவருக்கும் கந்தசாமிப்பெருமானின் அருள் கிட்டுவதாக.

**திரு.கனகசபாபதி பிரதீபன், -தலைவர்,**
**கைதடி வடக்கு கயிற்றசிட்டி, கந்தசாமி தேவஸ்தான பரிபாலன சபை.**

### வாழ்த்துச் செய்தி

அருவமும் உருவமாகி அனாதியாய் பலவாயொற் றாய் பிரமமாய் நின்ற சோதி பிழம்பதோர் மேனியாகி கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒரு திரு முருகன் வந்தாங்குதித்தனன் வடகைதை நகர் வாழ!

இயற்கை வளம் நிறைந்த ஈழமணித்திரு நாட்டின் தென்மராட்சி பிரதேசத்தின் நாற்புறமும் கடல் ஏரியால் சூழப்பட்ட சம்புகுண்டம். கரதண்டம் என்னும் இரு கிராமங்கள். இதில் கைதடி ஆதியில் குடியிருந்தவர்கள் உழவர் பரம்பரை. இவர்களை சீரும் சிறப் புடன் வாழ வைக்கவேண்டுமென தோறணக்கடவை என்னும் சிவபூமியில் 1775ம் ஆண்டு காலப் பகுதியில் எமது கயிற்றசிட்டி கந்தவேல் பெருமான் கால் பதித்தார். அவன் திருவருளால் அடியார்கள் ஒரு மடாலயத்தை அமைத்து பூசைகளையும் நிறைவு பெறச் செய்துவரும் காலத்தில் அவர்களின் வாழ்வாதாரமும் மேம்படத் தொடங்கியது.

இப்படி இருந்து வந்த காலத்தில் தனக்கு இடவசதி உள்ள நிலச்சு வாந்தர் கைதடி பொன்னம்பலம் முதலியாருடைய காணியில் தனக்கு ஆலயம் அமைத்து தரும்படி இடத்தைக் காட்டி அசரீரியாக கனவில் தோன்றியதற்கு அமைவாக தற்போதுள்ள ஆலயம் முதலியாரின் முயற்சியாலும் அடியார்களின் ஈகையாலும் பணம் பொருள் சேர்த்து மண். சுண்ணாம்பு. முருகைகல் என்பவற்றால் கட்டப்பட்டு. மடாலயத்தில் உள்ள வேலவபெருமாள் 1835ம் ஆண்டு ஆனி மாதம் உத்தர நட்சத்திரத்தில் மூலமூர்த்தியாக எழுந்தருளினார். இப்படியாக சகல பூசை வழிபாடுகளும் நடந்து வரும் காலத்தில் 1901ம் ஆண்டு முதலாவது கும்பாபிக்ஷேகமும் நடைபெற்று அப்பனின் இளையாற விருட்சமாக மகிள மரமும் நட்டு வைக்கப்பட்டது.

இப்படியாக சகல பூசைகள் விழாக்கள் யாவும் அடியார்களின் அற்பணிப்பாலும் ஐயாமாரின் ஒத்துழைப்பாலும் புனருத்தாரண வேலைகள் செய்யப்பட்டு எட்டு கும்பாபிக்ஷேகம் நடைபெற்று தற்போது 2022ம் ஆண்டு ஆனி திருவிழாவின் பின் எம்பெருமான் தனது இளைப்பாறு மரமாகிய மகிழ மரத்தையும் இழந்து தனக்கு புதிதாக மணி மண்டபம் அமைக்க வேண்டும் என திருவுளம் கொண்டு இப்பணி நிறைவுபெற எனது ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ முத்துக்குமார கணேசக் குருக்கள் அவர்களின் விடாமுயற்சியாலும் இப்பணி நிறைவு பெற்று 20.03.2024ல் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. யாவரும் போற்றுதலுக்குரிய விடயமாகும். இப்பணி நிறைவு பெற நிதியினை வாரி வழங்கிய சகலருக்கும் எல்லாம் வல்ல முருகப் பெருமானின் திருவருள் கிடைப்பதாக.

உருவாய் அருவாய். உளதாய் இலதாய்
மருவாய் மலராய். மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குரவாய் வருவாய். அருள்வாய் குகனே

**திரு.செ.இராசையா, முன்னாள் பொருளாளர்,**
**கயிற்றசிட்டி, கந்தசாமி தேவஸ்தான பரிபாலன சபை.**

### சிவகுரு ஆதின முதல்வரின் ஆசியுரை

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ளதும் நீர்வளம். நிலவளம் நிறைந்துள்ளதும் ஆலயங்கள் சூழ அமைந்துள்ளதுமான கைதடிப் பதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் கயிற்றசிட்டி கந்தசுவாமி கோவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் காண்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆலயங்கள் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகங்கள் நடைபெறுவதால் ஊரும். மக்களும் புனிதமடைகின்ற னர். அந்த வகையில் கைதடியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனான கந்தப்பெரு மான் தன்னைத்தொழும் அடியவர்களின் உடல். உள ஆரோக்கியத்தையும். ஆன்மீக வளர்ச்சியையும் பேணி மகிழ் வுடன் வாழ வைப்பார் என்பதில் ஐயமில்லை.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அதி சூக்கும மான இறைவனை தியானம். ஆவாகனம் முதலிய செயற் பாடுகள் ஊடாக ஆகாயம் (வெளி). காற்று. நெருப்பு. நீர். நிலம் ஆகிய பஞ்சபூதத் தத்துவங்களூடாக விக்கிரகங் களில் பிரதிட்டை செய்தல் மகா கும்பாபிஷேக கிரியை ஆகும். ஒட்டுமொத்த பிரபஞ்ச சக்திகளையும் ஒன்றிணைக் கும் கும்பாபிஷேக கிரியையே. கிரியைகளில் அதி உன்னதமானதாகும்.

இத்தகைய சிறப்பும் வல்லமையும் அருளாட்சியும் பொருந் திய மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளியிடப்படும் கும்பாபிஷேக மலர் சிறப்பாக வெளிவரவும் அனைவரும் ஸ்ரீகந்தசுவாமிப் பெருமானுடைய திருவருள் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் நல்ல விழுமியங் களும் அறநெறியும் இம்மண்ணிலே எழுச்சி பெறவும் ஆசி வேண்டி எல்லாம் வல்ல கயிற்றசிட்டி கந்தப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம். வெள்ளிக்கிழமை தோறும் ஆலயங் களில் பஜனை. கூட்டுப்பிரார்த்தனை என்பன நடைபெறு வதுடன். விசேட பூசைகள் இடம்பெற்று பிரசாதம் வழங்கப் பட வேண்டும். சிறுவயதிலிருந்து குழந்தைகளுக்கு அற நெறியையும். சைவப்பண்பாட்டையும், இந்து கலாசாரத் தையும் வளர்ப்போமாக இருந்தால் "நல்ல சமுதாயத்தை நாங்கள் உருவாக்க முடியும். எனவே இப்பணியை. ஆலயங்களும் பெற்றோரும் இணைந்து முன்னெடுக்க வேண்டும் என்பது எமது அன்பான வேண்டுகோளாகும்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

**தவத்திரு வேலன் சுவாமிகள்**
**ஆதீனமுதல்வர், சிவகுரு ஆதீனம், நல்லூர்.**
ஓம் நமசிவாய!

### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

சைவமும். தமிழும் சிறந்து விளங்கும் கைதடித் திருவூரில் கோயில் கொண்ட கயிற்றசிட்டி கந்தப்பெருமான் ஆலயத்தின் கும்பாபிஷேகம் குறித்து வாழ்த்தி ஆசீர்வதிப்பதில் ஆனந்த மடைகின்றேன். பழமை வாய்ந்த இத் திருக்கோவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு பெருங்கோயிலாக காட்சியளிக்கின்றது. ஆலய தர்மகர்த்தாக்கள் திருப்பணிச் சபையினர் எடுத்த முயற்சியின் பலனாக ஆலயம் மிக அழகாகக் காட்சியளிக்கின்றது. இந்திய சிற்பக்கலைஞர் திரு. கலியப்பெருமாள் புருஷோத்தமன் அவர்களின் கைவண்ணத்தில் அரிய சிற்ப வேலைப்பாடுகளோடு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ முத்துக்குமார கணேசக் குருக்கள் அவர்களின் ஆற்றுப்படுத்தலில் ஆலயப் பணிகள் யாவும் சிறப்பாக நடைபெறுகிறது.

இவ் ஆலயத்தில் பல தடவை சமயச் சொற்பொழிவாற்றும் சந்தர்ப்பம் சிறியேனுக்குக் கிடைத்தது . பக்தர்களின் உருக்கமான வழிபாட்டை இங்கு கண்டு ஆனந்தமடைந்தேன். ஆலயத் தேர்த்திரு விழா பெருங்கூட்டத்திற்கு மத்தியில் நடைபெறும். பலவிதமான காவடிகள் சுமந்து பக்தர்கள் வருவார்கள். இவ் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற முருகப் பெருமானையும் தெல்லிநகர் துர்க்கையம்பாளையும் பிரார்த்தித்து அமைகிறேன்.

**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை**

### திருப்பணிச் சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

ஈழ வள நாட்டிலே நம் தமிழ் பண்பாடும் கலை கலாசாரமும் சிறந்து விளங்கும் யாழ் பூமியின் தெற்கே உள்ள வடகைதையில் பல நூற்றாண்டுகளுக்கு மேலாக அருளாசி புரியும் கயிற்றசிட்டிக் கந்தனின் 9வது மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கயிற்றசிட்டிக் கந்தன் கும்பாபிஷேக மலர் வெளியிடுவதில் பெருமையடைகின்றோம்.நாம் அறிந்த வகையில் மிகப் பாரிய ஆரியர் சிற்ப வேலைப்பாடுகளுடன் மிகக் குறுகிய காலத்தில் கும்பாபிஷேகம் காண்பது கயிற்றசிட்டியானின் சிறப்பாகும். இதற்கு காரண கர்த்தாக்களாக இருப்பது கயிற்றசிட்டிக் கந்தன் மெய்யடியார்களாவர்.

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல் விருந் தோம்பு வான் இல்"

என்ற வள்ளுவன் வாக்குப்படி எம் பெருமானின் திருப்பணிக்கான நிதி உதவிகளை மெய்யடியர்களிடம் கேட்ட போது அவர்கள் முகமலர்ந்து இறைகாரியம் வெகுவிரைவில் நிறைவேற மனமுவந்து தந்து சிறப்பித்தனர். எச் செயலைச் செய்வதற்கும் குருவின் வழிகாட்டலும் ஆசியும் சிறப்பானதாக இருந்தால் அக்காரியம் சிறப்புற நிறைவேறும் என்பது பொது நியதி. எம் ஆலயப் பிரதான குரவின் " கந்தன் தருவான் கவலை வேண்டாம்" என்பதையே முதல் மூலதனமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இத் திருப்பணி இன்று சிறப்பாக குறுகிய நாட்களில் கும்பாபிஷேகம் காண்பதில் அவரின் வழிகாட்டல் சாட்சியாகும்.இத் தல வரலாற்றில் இருந்து எத்துயர் வரினும் கந்தன் தன் மெய்யடியார்களை காத்தருளத் தவறவில்லை என்பதே இவ்வாலயத்தின் சிறப்பம்சமாகும். இதற்கு வருடாந்த மகோற்சவங்களில் அடியார்கள் தாங்கி வரும் காவடிகள். அங்கபிரதட்சணங்கள் போன்றன சாட்சியாகும். முருகப் பெருமானின் மஹாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற உதவிய மெய்யடியார்களுக்கு கயிற்றசிட்டிக் கந்தனின் அருள் என்றும் இருக்கும் என்று கூறி வாழ்த்துகின்றேன்.

**செ.தவகுமாரன்**
**[illegible]தலைவர், பரிபாலனசபை**
**தலைவர், திருப்பணிச்சபை**
**கயிற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தானம்.**

விளம்பர அனுசரணை:
**வீடியோ ராங்கன்**
**கைதடி மத்தி கைதடி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் கடற்கரையில் நாளை தூய்மைப்பணிகள்!

காரைநகர், மார்ச் 20

உலக பூச்சிய கழிவு தினத்தை முன்னிட்டு 'அழகிய கடற்கரை' எனும் எண்ணக் கருவுக்கமையக் காரை நகர் பிரதேசசபையினரின் ஏற்பாட்டில் கடற்கரை யோரச் சுத்தப்படுத்தல் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கசூரினாக் கடற்கரையில் நாளை வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே, இந்தச் செயற்றிட்டத்தில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு காரைநகர் பிரதேசசபையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ப-66)


## பணியாளர்கள் தேவை

பலாலி வீதி கோண்டாவிலில்
இயங்கும் நிறுவனம்
ஒன்றுக்கு காசாளர், விற்பனை
உதவியாளர்கள்
(பெண்கள்) தேவை.

தொடர்பு: 077 790 6224

(CS/28250) J-1


# நினைவு நிகழ்வு!

தொழிற்சங்கவாதியாகவும் கூட்டுறவாளருமாக மக்களுக்குச் சேவையாற்றிய இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னாள் உத்தியோகத்தர் அமரர் சி.வேலுவின் 54ஆவது நினைவுதினநிகழ்வு இன்றுபுதன்கிழமை மாலை 4 மணிக்கு கச்சாய் வாகையடி சந்திக்கருகிலுள்ள மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-131)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

16.03.2024 அன்று
யாழ்ப்பாணப் பல்கலைக்
கழகத்தில் நடைபெற்ற
38 வது பட்டமளிப்பு விழாவில்
கல்வியியலில் முதுமாணிப்
பட்டத்தைப் பெற்ற
திரு. பாலசுப்பிரமணியம்
பாஸ்கரன்
(B.A, ME.d)
அவர்கள் மேலும் பட்டங்களும் பதவி
உயர்வுகளும் பெற பாராட்டி
வாழ்த்துகின்றோம்.



சித்தப்பா,சித்தி
81/10 , பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

Congratulations

(CS/54446) J-1


# சித்திரத் தேர் வெள்ளோட்டம்

இணுவில் தெற்கு ஞானாம்பிகை உடனாய ஞான லிங்கேச்சுரர் ஆலயத்தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-66)


## இருபத்தியிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
05 . 04 . 1955

விண்ணில்
15 . 03 . 2002



அமரர் பரமலிங்கம் பரமேஸ்வரி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
இருபத்தியிரண்டு ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.

கொட்டைப் புலம்,
களபூமி, காரைநகர்.

கணவன்
வேலன் பரமலிங்கம்.

(CS/54445) J-1



## பெயர்மாற்றம்

கரியாலை நாகபடுவான் இல.370 முழங்காவிலில்
வசிக்கும் **செல்லையா திலகநாதன்** ஆகிய நான்
எனது பெயரை **செல்லையா திருலோகநாதன்**
என மாற்றம் செய்வதோடு இனிவரும்
சகல ஆவணங்களிலும்
**செல்லையா திருலோகநாதன்** என்றே
கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக
சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**செல்லையா திருலோகநாதன்**

(CS/54443) J-1



## கண்ணீர் அஞ்சலி



தேசிய கல்வி நிறுவக யாழ்ப்பாண நிலைய ஓய்வு நிலை இணைப்பாளர்
**திருமதி த.வில்வநாதன்** அவர்களின் அன்புத் தாயார்

**லோகேஸ்வரி செல்லத்தம்பி**

அவர்கள் கடந்த 17.03.2024 ஞாயிற்றுக்கிழமை இறைபதமெய்தினார்.
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இணைப்பாளரும், விரிவுரையாளர்களும்,
பட்டப் பின் கல்வி டிப்ளோமா பாடநெறி
தேசிய கல்வி நிறுவக யாழ்ப்பாண நிலையம்.

(cs.54456) (N-1)



## யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனம்

**பொதுக்கூட்ட அறிவித்தல்**

யாழ். மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின்
2024 ம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம்
எதிர்வரும் 31.03.2024 ஞாயிற்றுக்கிழமை
அன்று இல 09.நந்தாவில் வீதி, தாவடியில்
அமைந்துள்ள JDCA அலுவலகத்தில்
மாலை 4.30 மணிக்கு நடைபெற உள்ளது.
அக்கூட்டத்திற்கு அனைத்து அங்கத்தவர்
களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு
தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

செயலாளர்
யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனம்



## எரிபொருள் நிலைய கனப்பி வேலைக்கான கேள்வி அறிவித்தல் விலை கோரல்
## துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ சங்கம் (வ/து)

பதிவு இல.ப.45/31.01.1971

T.P.021 228 4692, 021 2284530
E.Mail .thunukkaimpcs@gmail.com

துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ.சங்கத்திற்கு சொந்தமான மல்லாவி எரிபொருள் நிலையத்தின் கனப்பி (Canopy) வேலைக்கான கேள்வி விலை கோரல் அனுபவம் வாய்ந்த பொருத்தமான ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணத்தினையும், Canopy Structural Design இனையும் தலைவர், துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ.சங்கம், துணுக்காய். எனும் முகவரிக்கு கடமை நாட்களில் காலை 9.00am தொடக்கம் மாலை 5.00pm இடையில் நேரடியாக வருகை தந்து இடத்தினை பார்வையிட்டு பூரணப்படுத்திய விண்ணப்பங்களை **தலைவர், துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ.சங்கம், துணுக்காய்.** எனும் முகவரிக்கு 05.04.2024ந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலமாகவோ **அல்லது**

- நேரடியாகவோ அனுப்பிவைக்க வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது சங்கத்தின் இயக்குநர் சபையில் திறக்கப்படும்.
- கேள்விக் கூறுவிலையானது பெறுமதி அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.
- கேள்விக் கூறுவிலைதாரர் தகுதிவாய்ந்த பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரராக இருத்தல் வேண்டும்.
- கேள்விப் பிணை வைப்புத் தொகையானது மீளளிக்கக் கூடிய தொகை ரூபா. 100,000.00வும், மீளளிக்க முடியாத தொகை ரூபா.3000.00 ஆகவும் அமையும்.
- பெற்றோலியக் கூட்டுத்தாபன நடைமுறைகள் ஆலோசனைகளுக்கு அமைவாக வேலைகள் மேற்கொள்ளவேண்டும்.
- சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ பகுதியாகவோ நிராகரிக்கவோ மீள் கேள்வி கோரவோ இயக்குநர் சபைக்கு அதிகாரமுண்டு.

தலைவர்.
துணுக்காய்ப் பகுதிப் ப.நோ.கூ சங்கம்,
துணுக்காய்.

20.03.2024

(cr.41939) (N -1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடுக்குநாறிமலை...

வவுனியா மேலதிக நீதிவான் திருமதி பிருத்வி சுப்பிரமணியம் முன்னிலையில் நேற்று மீண்டும் இந்தச் சந்தேகநபர்கள் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களையடுத்து வழக்கைத் தள்ளுபடி செய்ததோடு கைதான எட்டுப் பேரையும் விடுதலைசெய்து நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் சந்தேகநபர்கள் அனைவரும் கடந்த எட்டாம் திகதி கைதுசெய்யப்பட்டு மறுநாள் வவுனியா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, காடுகள் கட்டளைச்சட்டம் தண்டனைச் சட்டக்கோவை என்பவற்றின் கீழும், தொல்பொருள்கள் கட்டளைச் சட்டத்தின் கீழும் குற்றம் புரிந்ததாகக் குற்றப்புகாரில் தெரிவிக்கப்பட்டது.

தொல்பொருள்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு பிணை அனுமதி இல்லை என்ற ரீதியில் சந்தேகநபர்கள் அனைவரும் கடந்த 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. கடந்த தவணை மீண்டும் வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது தொல்பொருள்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு, அது தொடர்பான அறிக்கை தொல்லியல் திணைக்களத்தால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றப்புகாருக்கு ஆதாரம் இல்லை என்றும் ஏற்கனவே இந்த ஆலயத்தில் வழிபாடுகள் மேற்கொள்வது தொடர்பில் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பிறிதொரு வழக்கில் வழங்கிய இடைக்காலக் கட்டளை இப்போதும் நடைமுறையில் உள்ள நிலையில், சந்தேகநபர்களின் சிவராத்திரிதின நடவடிக்கைகள் சட்ட ரீதியானவை என்றும் சந்தேகநபர்கள் சார்பில் தோன்றிய சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

ஆயினும் தொல்பொருள்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டதாகத் தொல்லியல் திணைக்கள ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டதால் பிணை வழங்கும் அதிகாரம் நீதிமன்றுக்கு இல்லை என்று சுட்டிக்காட்டிய மேலதிக நீதிவான் அடுத்த தவணையில் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்யுமாறும் பொலிஸாருக்குக் கட்டளையிட்டு வழக்கை நேற்றுச் செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைத்திருந்தார். சந்தேகநபர்களின் விளக்கமறியலும் அதுவரை நீடிக்கப்பட்டது. நேற்று மீண்டும் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபரின் ஆலோசனையை வழக்குத் தொடர்பில் பெறவேண்டியிருப்பதால் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்ய முடியவில்லை என்றும் அதற்குக் கால அவகாசம் தேவை என்றும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். கடந்த முறை பொலிஸார் ஒருவாரகாலத்தில் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்வதாகக் கூறியதன் அடிப்படையிலேயே வழக்கு ஒத்திவைக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டிய நீதிவான், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு என்ன அவசியம் ஏற்பட்டுள்ளது? என்றும் கேள்வி எழுப்பினார். குற்றப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றங்களில் ஒருசிலவற்றைத் தவிர மிகுதி அனைத்தும் இந்த நீதிமன்றினால் விசாரணை செய்யப்படக்கூடியவை என்பதையும் நீதிவான் சுட்டிக்காட்டினார். அந்நிலையில் பொலிஸாரின் விண்ணப்பம் தொடர்பில் சந்தேகநபரின் சட்டத்தரணிகள் தமது வாதங்களை முன்வைத்தனர்.

மூத்த சட்டத்தரணி ந.சிறீகாந்தா, "சந்தேகநபர்களுக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் குற்றப்புகார் தொடர்பில் தெளிவானதும் திட்டவட்டமானதுமான நிலைப்பாடு பொலிஸ் தரப்பிடம் காணப்படவில்லை. குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட வேண்டிய நாளில் சட்டமா அதிபரின் ஆலோசனை நாடப்படுகின்றது. கால அவகாசம் வழங்கப்படும். ஆனால், சந்தேகநபர்கள் மீண்டும் விளக்கமறியலுக்குச் செல்லவேண்டி ஏற்படும். பிணை வழங்க முடியாத குற்றங்களும் குற்றப்புகாரில் உள்ளடக்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் ஒருவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிடும்போது சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் பொருத்தமானதாகவும் காரணங்கள் இருக்கவேண்டும். அந்த நிலைமை இந்த வழக்கில் இல்லை. இருட்டு அறையொன்றில் கறுப்புப் பூனையைத் தேடும் நிலையிலேயே பொலிஸார் உள்ளனர். சந்தேகநபர்களின் சுதந்திரத்தை விளக்கமறியல் கட்டளைமூலம் கட்டுப்படுத்தும் போது அது சட்டரீதியானதாகவும் நீதியின் நலன்களுக்கு இசைவானதாகவும் இருக்கவேண்டும். எனவே பொலிஸாரின் விண்ணப்பத்தை நிராகரித்து உரியதொரு கட்டளையை சந்தேகநபர்கள் தொடர்பில் வழங்க முன்வரவேண்டும்" என்று வாதாடினார்.

தொடர்ந்து வாதிட்ட மூத்த சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம், பொலிஸாரின் சட்டவிரோதமான விண்ணப்பங்களை அனுமதிப்பதற்கு நீதிமன்றம் ஒன்றும் வெறும் இறப்பர் முத்திரை அல்ல என்று குறிப்பிட்டு விளக்கமறியல் உத்தரவு வழங்கப்படும்போது கவனத்தில் எடுக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் சமீபத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றையும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து வாதிட்ட சட்டத்தரணி க.சுகாஷ், "சட்டத்தைக் கையிலெடுத்து வழிபாடுகளில் ஈடுபடுவோரைத் தாக்கிக் கைதுசெய்துவிட்டு அதனை நியாயப்படுத்த பொய்யான குற்றச்சாட்டுகளைப் புனைந்துள்ளனர். பொலிஸாரின் நடவடிக்கைகள் சந்தேகநபர்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்றன. எனவே அவர்களின் விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும்" என்று கோரினார்.

இந்த நிலையில் சமர்ப்பணங்கள் செய்ய முற்பட்ட தொல்லியல் திணைக்கள சட்டத்தரணிகளிடம், "உங்களுக்கு இந்த வழக்கில் எந்தவொரு முகாந்திரமும் இதுவரையில் கிடையாது. பொலிஸார், சந்தேகநபர்கள் மற்றும் நீதிமன்றம் என்றே இந்த வழக்கில் விடயம் அமைந்துள்ளது. ஒன்றில் பொலிஸார் ஊடாக அல்லது அரச சட்டத்தரணி ஊடாக உங்கள் கருத்துகளை வழங்கவேண்டும்" என்று நீதிபதி அறிவுறுத்தினார். 'பொலிஸார் கோரியபடி ஒருவாரகால அவகாசம் வழங்கப்பட்டும் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யாமல் சட்டமா அதிபரைப்பற்றி பிரஸ்தாபிப்பது ஏற்கக்கூடியதல்ல. பிணைவழங்க முடியாத குற்ற வழக்கின் குற்றப்புகாரில் பொலிஸாரின் நடவடிக்கை சந்தேகநபர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கும் நோக்கத்துடன் செய்யப்படுவதாகத் தெரிகின்றது, இதனை அனுமதிக்கமுடியாது. அனுமதித்தால் அது நடமாடும் அடிப்படைச் சுதந்திரம் சந்தேகநபர்களுக்கு மறுக்கப்படும். இது நீதியின் பாற்பட்டதல்ல. எனவே சந்தேகநபர்களை விடுதலை செய்து உத்தரவிடுவதே சட்டரீதியானதும் நீதியானதும் என்பதால் அவர்கள் விடுதலைசெய்ய[illegible] என நீதிவான் கட்டளை வழங்கினார்.

சிரேஷ்ட சட்டத்தரணிகளான ந.சிறீகாந்தா, அன்ரன் புனிதநாயகம், சட்டத்தரணிகளான க.சுகாஷ், தி.திருஅருள், அ.திலீப்குமார், நிவிதா, கிசான், தர்சா, நிதர்சன், கொன்சியஸ், சாருகேசி உள்ளிட்ட பலர் சந்தேகநபர்கள் சார்பில் ஆஜராகி இருந்தனர். (அ-ம-26-110)

## தமிழ்...

கண்டித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன், கைது செய்யப்பட்டவர்களை உடன் விடுதலை செய்யுமாறும், தொல்பொருள்துறைசார் அமைச்சர் பதவி விலகவேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் தலைமையில் கூடியது.

இதன்போதே எதிரணியில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு நடுவே வந்து, பதாகைகளைத் தாங்கியவாறு, கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதனால் சபைக்குள் சிறிதுநேரம் பரபரப்பு ஏற்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா.சாணக்கியன், செ. கஜேந்திரன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், பழனி திகாம்பரம், வீ. இராதாகிருஷ்ணன், வேலுகுமார், உதயகுமார் ஆகியோர் சபைக்கு நடுவில் வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், எதிரணி பிரதம கொறடாவுமான லக் ஷ்மன் கிரியல்ல, நளின் பண்டார ஆகியோரும் தமிழ் எம்.பி.க்களுடன் இணைந்து தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

"வெடுக்குநாறி எங்கள் சொத்து, பொய் வழக்கை வாபஸ் பெற்று, அப்பாவிகளை உடன் விடுதலை செய், தொல்பொருள் அமைச்சரே பதவி விலகு, குருந்தூர்மலை எங்கள் சொத்து, மயிலத்தமடு, மாதவனை எங்கள் சொத்து" எனவும் கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது தமிழ் எம்.பி.க்களை அவர்களின் ஆசனங்களில் சென்று அமருமாறு ஆளுங்கட்சியினர் வலியுறுத்தினர். இது ஊடக பிரசார நடவடிக்கை எனவும் விமர்சித்தனர். 10 நிமிடங்களுக்கு மேலாக இந்தப்போராட்டம் நீடித்தது. (அ-44-26)

## ஆனந்தக்...

வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் கடந்த சிவராத்திரி தினத்தில் கைதுசெய்யப்பட்ட எட்டுப்பேரும் நீதிமன்றால் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளதுடன், வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்நிலையில் விடுதலைசெய்யப்பட்டவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்குப் பின்னர் வெளியில் வந்தனர். இதன்போது வெளியில் காத்திருந்த அவர்களது உறவினர்கள் கட்டித்தழுவி ஆனந்தக்கண்ணீர் விட்டு அவர்களை வரவேற்றனர். (அ-18-110)

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 05 . 1938



மறைவு
19 . 03 . 2024

### திருமதி சுப்புலக்சுமியம்மா சந்திரசேகரக்குருக்கள்

நீர்வேலி வாய்க்காற்றரவை ஆதீன கர்த்தராக இருந்து மறைந்த ஆ.சந்திரசேகரக்குருக்களின் மனைவியும் மறைந்த ச.ஜெயந்திநாதக்குருக்கள், திருமதி குமாரசுவாமிக்குருக்கள் தாட்சாயனியம்மா (ரஞ்சனி), திருமதி சுரேந்திரக்குருக்கள் நாகலெட்சுமியம்மா (வித்யா) ஆகியோரின் தாயாரும், திருமதி வசந்தி ஜெயந்திநாதக்குருக்களின் மாமியாரும், பகவதி மாதுளன், சிவாத்மிகா, சந்திரசேகர் சாருகேஷினி (மயூரேசன்), சுப்பலக்ஷ்மி (வசுந்தரா), பிட்சாடனசர்மா (குமரன்), சரண்யசர்மா (விகாஸ்), அபர்ணா பிரணவன், சோமவித்வேஸ்வரன், அஸ்விதா, அப்ஜா, அத்வைதா ஆகியோரின் பாட்டியாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2024) புதன்கிழமை காலை 7.00 மணிக்கு இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொலைத்தொடர்பு:
0773764307
0770130213

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 28307) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தில் நாளைமுதல் மிதமான மழைக்குச் சாத்தியம்

வெப்பச்சலன செயற்பாட்டின் விளைவாக வடக்கு மாகாணத்தில் நாளைமுதல் எதிர் வரும் 24ஆம் திகதிவரை மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது என்று யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் புவியி யல்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிர தீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தின் நேற்றைய (நேற்று முன்தினம்) வெப்பநிலை சராசரி 31 பாகை செல்சியஸ் என்பதாகப் பதிவாகியுள்ளது. வடக்கு மாகாணத்தின் பல இடங்களில் நாளின் அதிகூடிய வெப்பநிலை 36 பாகை செல்சியஸாகப் பதிவாகியுள்ளது. உணரக் கூடிய வெப்பநிலை 34 பாகை செல்சிய ஸாக இருந்துள்ளது. இந்த நிலைமை அடுத்துவரும் நாள்களில் இன்னமும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை நேற்று (நேற்றுமுன்தினம்) காலை 6 மணி முதல் இன்று (நேற்று) காலை 6 மணி வரையான 24 மணித்தி யாலத்தில் வடக்கு மாகாணத்தின் சராசரி ஆவியாக்க அளவு 11 மில்லிமீற்றர் ஆகும். சில இடங்களில் சரா சரியைவிட மிக உயர்வாகப் பதிவாகி யுள்ளது. எனவே ஒருநாளின் ஆவி யாக்க அளவே, 11 மில்லிமீற்றர் என் றால் ஒரு மாதத்தின் 30 நாளுக்கான ஆவியாக்க அளவு 330 மி.மீ. ஆகும்.

இவ்வாண்டு மார்ச் மாதம் இதுவரை ஒரு மி.மீ. மழைகூடக் கிடைக்கவில்லை. எதிர் வரும் 21, 22, 23 மற்றும் 24ஆம் திக திகளில் வெப்பச்சலன செயற்பாட்டால் வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு மிதமான மழை கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. இதைவிட மார்ச் 28ஆம் திகதிமுதல் ஏப்ரல் 8ஆம் திகதி வரை வடமாகாணத்தின் சில பகுதிக ளுக்குச் சற்றுக் கனமான மழைக்கு வாய்ப்புள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை வெப்பநிலை உயர்வாகவே இருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது . குறிப்பாக எதிர்வரும் ஏப்ரல், மே, ஜூன்மற் றும் ஜூலை மாதங்க ளில் வெப்பநிலை தற்போது உள்ளதை விடவும் உயர்வாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது - என்றுள்ளது. (ம)


## தேவை

புடைவை வியாபார நிலையம் ஒன்றிற்கு பெண் விற்பனையாளர் தேவை.

(CR/41943) J-1

தொடர்பு:- 076 770 7146

## காணி விற்பனைக்கு

755 மானிப்பாய் வீதியில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. சுற்றி மதில் கட்டியது.

(CS/54455) J-1

தொடர்பு:- 075 944 4601

## தவறவிடப்பட்டது

மானிப்பாய் மருதடி விநாயகருக்கு அண்மையில் உள்ள வீதியில் தேசிய அடையாள அட்டை (841521854V), சாரதி அனுமதிப் பத்திரம், வங்கி அட்டைகளுடன் எனது மணிபேஸ் தொலைந்து விட்டது. கண்டெடுத்துத் தருபவருக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்.

(CS/28304) S-1

077 378 1397

## வேலையாள் தேவை

கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான அரிசி ஆலை ஒன்றிற்கு கனரக சாரதி தேவை.

(CS/54372) J-1

தொடர்பு:- 076 096 9728

## காணி தேவை

தெல்லிப்பழை அம்பனையில் மகாஜனக் கல்லூரி சூழலில் நிலப்பரப்பு ஐந்துக்கு மேற்பட்ட காணி விலைக்குத் தேவை.

விற்க விரும்பியவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(CS/28301) J-1

077 608 7502

## கடை வாடகைக்குத் தேவை

சத்திரச் சந்தியிலிருந்து அரசாங்க பேருந்து நிலையத்திற்கு இடைப்பட்ட பிரதேசத்தில் கடை வாடகைக்குத் தேவை. நிலப்பரப்பு 1000 சதுர அடிக்குக் குறையாமல் இருக்கவேண்டும்.

தரகர் தொடர்பு கொள்ளவேண்டாம்.

(CS/54453) J-1

தொடர்பு :- 077 918 3074

## காணி விற்பனைக்கு

A9 வீதியிலிருந்து 2Km தூரத்தில் மிருசுவில் அம்மன் கோவில் அருகாமையில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. ஒரு பரப்பின் விலை நான்கு (04) லட்சம் மட்டும். பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்பு: 074 325 7894

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக 1 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தரகர்கள் தொடர்பு கொள்ளவேண்டாம்.

(CS/54452) J-1

தொடர்பு:- 076 206 1703

## பகிரங்க ஏல விற்பனை

Printer, வாகன ரயர்கள், வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் என்பன 25.03.2024ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு பிரதம செயலாளர் அலுவலக வளாகத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

பிரதம செயலாளர்,
வடமாகாணம்,
கைதடி.


# மரண அறிவித்தல்



தோற்றம்
14.08.1939

மறைவு
17.03.2024

## சின்னப்பு பொன்னம்மா

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் 1ஆம் குறுக்குத்தெரு ஊரெழு கிழக்கு, ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு பொன்னம்மா கடந்த 17.03.2024 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இளையதம்பி சின்னப்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இளையதம்பி - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்றவர்களான ஐயாத்துரை, திருநாவுக்கரசு, இரத்தினம், பீதாம்பரம் மற்றும் நவரத்தினம், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சரஸ்வதி, பாலசிங்கம், தர்மலிங்கம், சிவலிங்கம் ஆகி யோரின் சகோதரியும், குமணா, இராஜசேகரம், கோமதி, ரஜனி, உஷா, ரஜீகலா, கிரிதரன், பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தாயா ரும், தேவசாமி, பிறேமாவதி, சிவகுமார், சிவநேசன், வரதராஜன், கணேசமூர்த்தி, சுகந்தா, காயத்திரி ஆகியோரின் மாமியாரும், சிவரூபன் - அனுசியா, தனேஸ் - வினோஜிகா, தர்ஷன், ஜெயரூபன் - தர்ஷா, சஞ்ஜீவன், பிறிஜங்கா, ரஜீவன், திபிஷா, சாணுஜன், நிறோஜன், நிலக்சன், விதுசன், வினுசன், அபிநயன், ஆகாஸ், அனுஸ், நிசானா, சயானா. ஸ்சாணி ஆகியோரின் பேர்த்தியும், தன்விகா, ஆருஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (20.03.2024) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு மேற்கு, பொக் கனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு,
ஊரெழு.

(CS/54447) J-1

தகவல்:
குடும்பத்தினர்.

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 · advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org